Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல்,
பழைய வீடுகளைத் திருத்துதல்,
குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting

அனைத்தும் தரமாகவும், குறைந்த
விலையிலும், குறித்த காலத்திலும்
செய்து கொடுக்கப்படும்
(C/3690)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 03 செவ்வாய்க்கிழமை (17.06.2014) பக்கங்கள் 20 ஓசை –259

# அளுத்கமவில் வன்செயல்

## ☆ மூவர் பலி ☆ 80 பேர் காயம் ☆ கடைகள் தீக்கிரை





(கொழும்பு)

அளுத்கம பொலிஸ் பிரிவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் நேற்று முன்தினம் இரவு வல்பிட்டிய பள்ளிவாசலுக்கருகில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் எண்பதுக்கு மேற்பட்டோர் காயமுற்ற நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்தனர் எனவும் நேற்று அதிகாலை வேளையே அவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப படைந்துள்ளன.

19 ஆம் பக்கம் பார்க்க

## அளுத்கம சம்பவத்திற்கு அமெரிக்கா கண்டனம்

அளுத்கம மற்றும் பேருவளைப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களை அமெரிக்கா கண்டித்துள்ளது. இந்தச் சம்பவங்களை கண்டித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

சட்ட ஒழுங்கை பேணி பொதுமக்களின் உயிர்களையும், வழிபாட்டு ஸ்தலங்களையும், சொத்துக்களையும் பாதுகாக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அதற்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், வன்முறைகளை தவிர்த்து, பொறுமை காத்து, சட்ட ஆட்சியை மதித்து நடக்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்வதாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பதுளையிலும் பதற்றம்

(கொழும்பு)

பதுளையிலும் நேற்று கலவரங்கள் இடம்பெற்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொது பலசேனா உறுப்பினர்களால் பதுளை நகரில் உள்ள முஸ்லிம் கடைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பதுளை நகரில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## வன்செயலை தடுக்க வேண்டும்



களுத்துறை மாவட்டம் அளுத்கமவில் நடந்த வன்செயல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் நவிப்பிள்ளை அதிர்ச்சி தெரிவித்திருக்கிறார்.

இந்த வன்செயலை தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்த வன்செயலை தூண்டிய வெறுப்பை உருவாக்கும் பேச்சை தடுக்க வேண்டும் என்றும் அனைத்து சிறுபான்மையினரையும் அது பாதுகாக்க வேண்டும் என்றும் ஆணையர் தனது அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

ஏனைய முஸ்லிம் மக்கள் இருக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

## வன்முறை புரிந்தவர்களுக்கு தண்டனை நிச்சயம்



(கொழும்பு)

அளுத்கமவில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்திற்கு காரணமானவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தைக் கையில் எடுப்பதற்கு எவரையும் அரசாங்கம் அனுமதிக்காது எனவும், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமாறும், அளுத்கமவில் இடம்பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது தண்டனையை வழங்குவதற்காக விசாரணை ஒன்று இடம்பெறும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க


## எமது பிரச்சினைக்கு சர்வதேசம் தீர்வு தராது

(பாண்டியன்குளம்)

எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகாண வேண்டும். எங்கள் பிரச்சினைகளுக்கு சர்வதேசம் தீர்வு தராது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாண்டியன் குளத்திலுள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பிரதேசத்தின் கீழான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரச்சினைகளுக்கு



நாமே தீர்வு காணவேண்டுமே யொழிய வெளிநாடுகள் எதுவும் எமது பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வினை காணமுடியாது.

அந்தவகையில், அரசியல் ரீதியில் மக்கள் தெளிவானதொரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## வாள்வெட்டில் ஒருவர் பலி கோண்டாவிலில் கோரம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் அரசடிப்பிள்ளையார் கோவிலடியில் இளைஞர் குழு வீடு புகுந்து நடத்திய வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் பலியாகியுள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் மேலும் இரு இளைஞர்கள் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளனர். இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்று மாலை 6.00 மணியளவில் கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோவிலடியில் உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் குழுவுக்கும் வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பத்திற்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கிருந்து நகர்ந்த உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் குழு திரும்பி வந்து வாள்வெட்டு தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் இரவீந்திரன் சுகிர்தன் (வயது - 19) என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே வாள்வெட்டுக்கு இலக்காகி பலியானார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி நகரசபையில் பெரும் நிதி மோசடி

### அம்பலப்படுத்தினார் எதிர்க்கட்சி உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட சாவகச்சேரி நகரசபையில் பெரும் பணமோசடி இடம்பெற்றுள்ளது. இந்த நிதி மோசடியை சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர் திருக்குமரன் இப்போது அம்பலப்படுத்தியுள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றபோது நகரசபையினால்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே
தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சை வினாத்தாள்

# சமூகக்கட்டமைப்பின் வேர்களை யுத்தம் ஆட்டம் காணச்செய்துள்ளது

## வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



முப்பது வருடங்களுக்கு மேலான அழிவு யுத்தம் எமது சமூக கட்டமைப்புக்களின் வேர்களை ஆட்டம் காணச் செய்துள்ளது. இதனால் எமது கலை, கலாசாரம், பண்பாடுகள் என்பன நொருங்கிப்போய் உள்ளன. இவற்றில் எஞ்சியவற்றை பாதுகாக்கவும், நொருங்கியவற்றை மீளக் கட்டியெழுப்பவும் எமது இளைஞர், யுவதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், சனசமூக நிலையங்கள், மாதர் அமைப்புகள் ஆகியன இணைந்து செயற்படுவது அவசியமாகும் என ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நல்லூர் அரசடி வீதி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் முழுமையான அரசியல் பலம் எமது கரங்களுக்கு கிடைக்கவில்லை. அது எமது இனத்தை முடக்கிப் போடுபவர்களின் கரங்களில் சிக்கிச் செயலற்று கிடக்கின்றது. அதுகூட எமது பிள்ளைகளின் ஆற்றல்களை வெளிப்படுத்தத் த்டையாக உள்ளது. இந்த இடத்தில் நான் அரசியல் பேச விரும்பவில்லை. ஆனால் மக்கள் வழங்குகின்ற அரசியல் அங்கீகாரமே நொருங்கிக் கிடக்கும் எமது சமூகக் கட்டமைப்புக்களை தூக்கி நிறுத்தவும், பாதுகாக்கவுமான அங்கீகரிப்பை அல்லது பலத்தை வழங்குகின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நான் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற காரணத்தினாலும், மாகாண சபையின் அதிகார வரம்புகளை ஓர் அளவுக்கு கற்றுத் தெரிந்தவன் என்ற முறையிலும் உங்களிடம் ஒன்றைக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

சுகாதாரம், விளையாட்டு, சமூக மேம்பாடு, கலை, கலாசாரம், கல்வி என்பவற்றை மேம்படுத்துவதற்கு அதிகமான வாய்ப்புக்கள் மாகாண சபைக்கு உண்டு. இத்திட்டங்களை நடைமுறைபடுத்துவதற்கு மத்திய அரசாங்கமோ அல்லது ஆளுநரோ ஒரு போதும் தடையாக இல்லை. ஆனால் துரதிஷ்டவசமாக செயற்திறனின்மையே அதற்கு முக்கிய தடையாக உள்ளது. அச் செயற்திறனின்மையை மூடி மறைப்பதற்காக அரசியல் சார்ந்த வேறு பிரச்சினைகளுக்கும் நாளாந்தம் தீர்க்கப்படக்கூடிய இவ்வாறான பிரச்சினைகளுக்கும் முடிச்சுப் போட்டு இவர்கள் பொய் விவாதத்தை முடக்கி விட்டு இருக்கின்றார்கள்.

மாகாண சபை அதிகார மேற்று இன்று எட்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன. இது வரை எவ்விதமான நியதிச்சட்டங்களும் ஆக்கப்படவில்லை. நியதிச் சட்டங்களை ஆக்காமல் மாகாண சபைக்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பிரயோகிக்க முடியாது. அது மட்டுமல்ல நிதி நியதிச் சட்டத்தை உருவாக்காமல் மாகாண சபை எவ்வித வருமானங்களையும் திரட்ட முடியாது. வருமானங்களை ஏற்படுத்திக் கொண்டால்தான் விளையாட்டு, சமூக மேம்பாடு, கலை கலாசாரம் போன்றவற்றை வளர்த்தெடுப்பதற்கு கூடிய ஊக்குவிப்புகளை மாகாண சபையினால் வழங்க முடியும். வாய்ப்புக்களை தவறவிட்ட சமுதாயமாகவே எங்களை வாழப் பழக்கிக் கொண்டுள்ளனர். ஆனால் ஈ.பி.டி.பி. ஆகிய நாங்கள் அரசியல் பிரச்சினைகளையும், அன்றாடப் பிரச்சினைகளையும் ஒன்றோடு ஒன்று சேர்த்து குழப்பிக்கொள்வது இல்லை, கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தினையும் எமது மக்களின் நன்மைக்காக பாவிக்க தவறுவதுமில்லை. காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் நியாயமான தீர்வுகாண வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அது வரையில் எமது கல்வி, சுகாதாரம், சுயதொழில் ஊக்குவிப்புக்கள், சமூக அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை ஒதுக்கி வைக்கவும் முடியாது என்றார்.

# வருடாந்த மஹோற்சவம்

ஆவரங்கால் பர்வதவர்த்தனி அம்மை சமேத நடராஜ இராமலிங்க சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவமானது எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழ க்கள் இடம்பெறவுள்ளன.

இத்திருவிழாக்களின் வரிசையில் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் யூலை மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 3ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத் திருவிழாவும் இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (85)

# யாழ்.மாநகர சபையில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நேற்று முதல் யாழ்.மாநகர சபையில் நடைபெற்று வருவதாக யாழ். மாநகர சபையின் செயலாளர் தா.தர்மரட்ணம் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையின் உள்ளூராட்சி வாரம் நேற்று முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், நேற்றைய தினம் யாழ். மாநகர சபையில் நடமாடும் சேவை நடைபெற்றுள்ளதுடன் வருமானம் மேம்பாட்டுத் திட்டமும் செயற்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி சுகாதார மற்றும் சேவைகள் மேம்பாட்டுத் திட்டங்களும், 19 ஆம் திகதி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முதல்வர் தலைமையில் சுகாதாரமும் மாநகர சபை வேலைத்திட்டங்கள் தொடர்பில் யாழ்.மாநகரசபையில் இருந்து துரையப்பா விளையாட்டரங்கு வரையான ஊர்வலமொன்றும் ஆரம்பாகவுள்ளன.

அன்றைய தினம் யாழ். மாநகர சபையில் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் உமாசுதன் தலைமையில் வைத்திய நடமாடும் சேவை ஒன்றும் நடைபெறவுள்ளது.



மேலும் 20 ஆம் திகதி சுற்றாடல் மற்றும் மரம் நடுகை தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. யம்பு நாவல், கொய்யா போன்ற மரங்கள் நாட்டி வைக்கப்படவுள்ளது.

21 ஆம் திகதி கல்வி மற்றும் நூலகக அபிவிருத்தி தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் 22 ஆம் திகதி இறுதிநாள் விளையாட்டு மற்றும் பரிசில் வழங்கும் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அன்றைய தினம் யாழ். மாநகர சபையின் குழுக்களுக்கிடையே கரப்பந்தாட்டம் நடைபெறவுள்ளது எனவும் யாழ். மாநகரசபையின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# கனகரத்தினம் ம.வி.யில் கற்றல் வள நிலையம் திறப்பு



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஐந்து இலட்சம் ரூபா நிதியுதவியுடன் யாழ்.கனகரதத்தினம் மத்திய மகா வித்தியா லயத்தின் கற்றல் வள நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டு வைபவ ரீதியாக நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து சிறப்பித்தார். அத்துடன் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிர்வாகிகள், யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையின் அதிபர் உரையாற்றும் போது ஆரம்பத்திலிருந்தே மாணவர்களை வாசிப்பில் ஊக்குவிப்பதன் ஊடாக அறிவும், ஆற்றலும், ஆளுமையும் பெற்ற மாணவ சமுதாயத்தை உருவாக்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

# ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்கூசி வலைகள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கம் அப்பகுதியில் கடற்றொழிலாளர் பயன்படுத்தி வந்த சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான கடற்றொழில் நடவடிக்கைக்கு அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டிருக்கும் தங்கூசி வலைகளை எரித்து அழித்துள்ளது.

நேற்றுக்காலை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.மூத்தி முன்னிலையில் மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கத்துக்கு முன்பாக வைத்து இவை எரித்து அழிக்கப்பட்டன.

நேற்றுக்காலை மண்டைதீவு கடற்றொழிலாளர்கள், யாழ். கடற்றொழில நீரியல் வளத்திணைக்களத்தின் முன்பாக ஒன்றுகூடி தாம் முன்வந்து தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை வருங்காலத்தில் பயன்படுத்த மாட்டோம். அத்துடன் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளையும் பயன்படுத்த மாட்டோம் என்றும் தங்கள் முன்பாக தமது சங்கத்திற்குட்பட்ட கடற்றொழிலாளர்களது தங்குசூசி வலைகளை அழிக்கவுள்ளதாகவும் உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தியிடம் தெரிவித்து மகஜர் ஒன்றையும் கையளித்ததுடன், உதவிப் பணிப்பாளரையும் அழைத்துச் சென்று சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளை எரித்து அழித்துள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் மண்டைதீவு கடற்றொழிலாளர்களைப் போன்று ஏனைய பகுதி கடற்றொழிலாளர்களும் முன்வந்து தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்துவதனை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)


## சிறு விளம்பரம்


### டயானா பிளாஸ்ரிக்


*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)



மானிப்பாய் அந்தோனியார் திருத்தல வருடாந்த நவநாள் ஆராதனையின் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும், திருச்சொரூப பவனியும் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றபோது திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதையும், அந்தோனியார் திருச்சொரூபப் பவனி வீதியுலா வருவதையும் காணலாம். (48)

# கொழுத்தும் வெயிலில் காத்து நின்று நோயாளர்களை பார்க்கும் அவலம்

## அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)


யாழ்போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை பார்வையிடச் செல்வோர் வைத்தியசாலையின் முன்பக்க புதிய நுழைவாயிலில் இரண்டு பக்கமும் சுட்டெரிக்கும் வெயிலில் கால்கடுக்க காத்து நிற்பதால் அசௌகரியத்துக்கு உள்ளாகி வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆரம்பத்தில் வெளிநோயாளர் பிரிவானது வாசல் நிழல் மரங்கள் மத்தியில் இருந்ததால் அங்கு வெயிலின் தாக்கம் இல்லாமல் இருந்தது. அண்மையில் புதிய மாடிக்கட்டடம் திறந்தபோது அதிலுள்ள புதிய நுழைவாயில் ஊடாக பொதுமக்கள், நோயாளர்களை பார்வையிடச் சென்றுவர அனுமதிக்கப்பட்டது. அங்கு ஒரு மரக்கொப்பு கூட நிழலுக்கு இல்லையென வயோதிபர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி பாஸ் நடைமுறையாலும் பல சிக்கல்களை எதிர்நோக்குவதோடு வவுனியா - கிளிநொச்சி போன்ற தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்களுடன் உதவிக்கு வருவோர் பாஸ் இல்லாமல் செல்ல முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

'யுத்த காலத்திலும் போக்குவரத்துக்காக நாங்கள் பாஸ் எடுத்தோம். பின்னர் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்வதற்கும் பாஸ் எடுத்தோம். இப்படி ஒவ்வொன்றுக்கும் பாஸ்களிலேயே எங்கள் வாழ்க்கை பாழாய் போகிறது. எமது உறவினர் ஒருவர் சாகக் கிடக்கிறார். அவரைப் பார்க்க வந்தால் பாஸ் கேட்கின்றனர்' இது நியாயமா என இன்னொரு வயோதிபர் கண்ணீருடன் தெரிவித்தார்.

எனவே இவ் விடயத்தில் உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் நோயாளர்களை பார்வையிட செல்பவர்களும் நோயாளர்களாக வேண்டிய நிலை ஏற்படுமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.



யாழ்.பொலிஸ் நிலையத்தின் கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்து வருவதைக் காணலாம். (பா)

# காதுச் சிகிச்சைக்காக நிலாமதிக்கு உதவி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கனடா காரை கலாசார மன்றத்தின் மனிதாபிமான உதவிகள் வழங்கும் செயற்பாடு மூலமாக வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட செல்வி நிலாமதி செல்வராசாவின் காதுச் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிதி பயனாளியிடம் ஒப்படைக்கப்பட்டது.


அண்மையில் செல்வி நிலாமதி செல்வராசா மற்றும் அவரது தந்தையார் வே.செல்வராசா ஆகியோர் காரைநகர் அபிவிருத்தி சபை காரியாலயத்திற்குச் சென்று மன்றத்தினால் சேர்த்து வழங்கப்பட்ட 3,68,000 ரூபாவுக்கான காசோலையினைப் பெற்றுக்கொண்டனர்.

காரைநகர் அபிவிருத்திச் சபை செயலாளர் இ.திருப்புகழூர்சிங்கம் காசோலையினை கையளித்தார். இந்நிகழ்வில் உபசெயலாளர் வே.சபாலிங்கம் மற்றும் பொருளாளர் ந.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

இவ்வுதவியை பெற்றுக்கொண்ட வே.செல்வராசா கனடா காரை கலாசார மன்றத்திற்கும் இம்மன்றத்தின் ஊடாக நிதி வழங்கியவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். (10)

# "ஆனந்த சாரங்கம்" இசை விழா

(யாழ்ப்பாணம்)



நல்லூர் சாரங்கம் இசை மன்றம் நடாத்திய "ஆனந்த சாரங்கம்" என்ற பெயரில் அமைந்த இசை விழா கடந்த வியாழக்கிழமை கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு தம்பதியரும் சிறப்பு விருந்தினராக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சங்கீத வித்துவான் ஏ.கே. கருணாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஆனந்த சாரங்கம் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலுக்கான அறிமுகவுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் நூலை வெளியிட்டு வைக்க கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அதைப் பெற்றுக் கொண்டார். பெற்றோர் சார்பில் உரையை வைத்திய கலாநிதி எஸ்.கோணேசனும் நன்றியுரையை மருத்துவபீடத் தொழில்நுட்பவியலாளர் சாவித்திரி தேவி ரவிச்சந்திரனும் வழங்கினர். (63,48)

# பொ(ய்). ஐங்கரநேசா, போதுமப்பு உங்கட கிளித்தட்டு விளையாட்டு...




**ஐயோ ஐங்கரநேசா... உங்களை விடப் பார்த்தீனயம் செடி ஒண்டும் தமிழ்மக்களுக்கு ஆபத்தில்லைக் கண்டியளோ...**

அந்த மாதிரிப் பொய் சொல்லியே காதிலை பூவைச் சுத்துகிறீங்களப்பு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ரை விவசாய பீடத்தை அறிவியல் நகரில இருக்கிற வளாகத்தில ஆரம்பிக்கிற வைபவம் 14.06.2014 சனிக்கிழமை நடந்தபோது உங்களுக்கு அழைப்புக் கிடைக்கேல்ல எண்டு சொல்லியிருக்கிறியள்.

இதை உங்கட நெஞ்சறிஞ்சுதான் சொல்லியிருக்கிறியளோ...

ஏனெண்டால், நீங்கள் என்ன சொல்லுவியள்? என்னமாதிரி நடப்பியள்? எண்டு இந்த உலகத்தில ஒருதராலும் விளங்கேலாது.

அந்த மாதிரியான ஒரு ஆக்களப்பா நீங்கள்.

நிகழ்ச்சிகளுக்குக் கூப்பிட்டால் அதில கலந்து கொள்ள மாட்டம் எண்டு சொல்லி அதைப் புறக்கணிப்பியள். அதை ஒரு வீரப்போராட்டம் எண்டமாதிரி பில்டப் காட்டுவியள்.

கூப்பிடேல்ல எண்டால், எங்களை அழைக்கேல்ல, ஒதுக்கிப் போட்டினம் எண்டு குறை சொல்லுவியள்.

இப்பழ அந்தப் பக்கம் வந்தால் இந்தப் பக்கமாகவும் இந்தப் பக்கம் வந்தால் அந்தப் பக்கமுமாக நிண்டு கொண்டு கிளித்தட்டு மறிக்கிறதில வலு விண்ணர்கள் நீங்கள்.

எந்தப் பக்கம் நிண்டாலும் எங்களுக்கு வெற்றிதான் எண்டு நீங்கள் அடிக்கடி சொல்லிறது இதைத்தானோ... இந்த மாதிரியான தப்பிலித்தனத்தைத்தானோ...

உங்களுக்கு ஒரு சங்கதியை நினைவூட்ட விரும்பிறன்.

போனமாதம் மாங்குளம் மகாவித்தியாலயத்திலயும் கிளிநொச்சி மாவட்டத்தில இருக்கிற முரசுமோட்டை முருகானந்தா மத்திய கல்லூரியிலயும் விஞ்ஞான ஆய்வு கூடங்களைத் திறக்கிறதுக்காக வடமாகாணசபையின்ரை மன்னிக்கவும் யாழ்ப்பாண மாகாணசபையின்ரை முதலமைச்சர் **'எங்கள் தங்கம்' சிவசிவா**வும் **கல்வி அமைச்சர் குருகுலராஜா**வும் அழைக்கப்பட்டிருந்தினம்.

அந்த அழைப்பிதழில இவையின்ரை பேர் இருந்ததை என்ரை கண்ணாலயே கண்டன்.

இவையின்ரை பேர் பொறிச்ச கல்லும் இந்தப் பள்ளிக்கூடங்களில பதிக்கப்பட்டிருந்துது.

விழாவுக்கு இவையும் – அதுதான் உங்கட ஆக்களும் – வருவினம் எண்டு பாடசாலையில வரவேற்கிறதுக்கு ஆயத்தங்களும் செய்யப்பட்டிருந்திது. எங்கள் தங்கத்தை நல்ல முறையில வரவேற்கோணும் எண்டும் கல்வி அமைச்சரின்ரை காலை வழிவாப் பிடிக்கோணும் எண்டும் கொஞ்ச (தமிழ்த்தேசிய) வாத்திமாரும் அவதிப்பட்டுக்கொண்டு வேர்க்க விறுவிறுக்க நிண்டிச்சினம்.

ஆனால், நான் முன்னமே சொன்னதைப்போல 'அந்தப் பக்கம் வந்தால் இந்தப் பக்கமாகவும் இந்தப் பக்கம் வந்தால் அந்தப் பக்கமுமாக நிண்டு கொண்டு கிளித்தட்டை மறிச்சிச்சினம் எங்கள் தங்கம் சிவசிவாவும் குருகுலராஜாவும். சொல்லி வைச்சமாதிரியே ரண்டு பேருமே வரேல்ல.

ஆக்கள் வராட்டிலும் இவையின்ரை பேர் மட்டும் வரலாற்றில பொறிக்கப்பட்டுது. அந்தக் கல்லை இனி ஆரும் நீக்குவினமோ...

இப்பிடி அழைப்பு விட்டால் போக மாட்டினம். கலந்து கொள்ள மாட்டினம்.

அழைப்பு விடுக்காட்டில் கூப்பிடேல்ல, அழைக்கேல்ல எண்டு ஒப்பாரி.

இது என்ன முறையில ஞாயம் எண்டு சொல்லுங்கோ.... ஐயோ... ஐங்கரநேசா...

இப்பிடியான குணத்துக்கு ஊரில என்ன சொல்லுவினம் எண்டு உங்களுக்குத் தெரியும்.

**அதை இதில நான் சொன்னன் எண்டால் உங்கட இடுப்பில வேட்டி தேவையில்லை.**

பொய்யைச் சொல்லிச் சொல்லியே தமிழ்த்தலைவர்கள் தமிழ் மக்களை பேய்த்தரவளியள் ஆக்கினதொண்டும் புதிசில்லை.

அந்த வழியில அப்பனுக்குத் தப்பாமல் பிறந்த பிள்ளையைப்போல தமிழ்த்தலைமைகளின்ரை தப்பிலிக்குணத்தோட அப்பிடியே பிறந்தமாதிரிப் பொய்த்தொண்டு செய்யிறியள்.

நல்லாயிருக்கு... உங்களுக்குச் சோக்கான ஒரு எதிர்காலம் பிறக்கத்தான் போகுது.

நீங்கள் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கே தண்ணிகாட்டின ஆள் எண்டது இப்பதான் நினைவுக்கு வருகுதப்பு.

**நீங்கள் அழிக்க முயற்சிக்கிற பார்த்தீனியம் செடி ஒண்டும் உங்கள விட, நீங்கள் சொல்லிற பொய்யை விட பாதகமானதில்லை.**

**ஐயோ... ஐங்கரநேசா... பொய்யாலே வாழ நினைத்தீரோ ராசா...**

சரியாய்தான் உமக்கு அமைச்சது முன்னெழுத்து...

**பொ (பொய்) ஐங்கரநேசன் எண்டது....**

ஹி.. ஹி... ஹி...

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள். - சுபாஷ் சந்திரபோஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வயதானவர்கள் பற்றிய கதை!

"கடந்த காலமோ திரும்புவதில்லை... நிகழ் காலமோ விரும்புவதில்லை... எதிர் காலமோ அரும்புவதில்லை... இதுதானே அறுபதின் நிலை..."

வெள்ளிவிழா திரைப்படத்தில் கண்ணதாசன் எழுதி வி.குமாரின் இசையமைப்பில், மற்றொரு இசையமைப்பாளரான எம்.எஸ்.விஸ்வநாதன் பாடிய பாடலில் அந்த வரிகள் வரும்.

ஐம்பது வயதைத் தாண்டியவர்கள் எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதில்லை. கடந்த காலத்தை நியாயப்படுத்துவதிலேயே அவர்கள் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதுண்டு.

ஒருவர் இளையவர்களின் செயல்களைப் பார்த்து பொதுவாகவே எரிச்சலுறத் தொடங்கி விட்டாரென்றால் அவர் பழைய தலைமுறைக்குச் சென்றுவிட்டார் என்று பொருள். அல்லது "பெரிசு என்னவாம்?" என்று தாயிடம் மகன் கேட்கும் போதே இந்த இடைவெளி ஏற்பட்டு விட்டதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தலைமுறை மாற்றம் தவிர்க்க முடியாதது. இதைப் புரிந்து கொள்வதிலிருந்துதான் இளைஞர்களுடனான நல்லுறவைப் பெரியவர்கள் ஏற்படுத்திக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் வயதானவர்களுக்கேயுரிய கலைநயத்தோடு சும்மா புலம்பிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

ஆனால், இந்த வயதானவர்கள் 'வர வர உலகம் கெட்டுக் கொண்டே போகிறதே' என்ற கவலையைக் கொண்டிருந்தாலும், உண்மையில் அவர்கள் மகிழ்ச்சியானவர்கள் என்ற செய்தியை ஒரு ஆய்வு வெளிப்படுத்தியிருக்கிறது. இதைக் கண்டு சொன்ன ஆய்வாளர்கள் வயதானவர்களாகத்தான் இருந்திருப்பர் என்பதை யூகிப்பது ஒன்றும் கடினமல்ல.

நாற்பது வயதுக்கு மேல் மனிதன் மகிழ்ச்சியாக வாழ முடியாது; இளமையில்தான் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் எல்லாம் என்ற கருத்து சரியல்ல என்று அந்தப் புதிய ஆய்வு கூறுகிறது.

வேலையில் இருந்து ஓய்வு பெறும் காலத்தில்தான் மனிதர்கள் மிகுந்த மகிழ்ச்சியை அனுபவிக்கிறார்கள். வாழ்க்கையின் ஆகக் கடைசி காலத்தில்தான் – அதாவது 80 வயதுக்குப் பிறகு –இப்படியொரு வாழ்க்கை தேவைதானா என்ற விரக்தி மேலிடுகிறதாம்.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் அறுபதாயிரம் பேரிடம் பத்தாண்டுகளாக சேகரித்த தகவல்களை அலசியதில், 55 வயதில் இருந்து 75 வயது வரையிலான காலகட்டத்தில் மனிதர்கள் உச்சகட்ட மகிழ்ச்சியில் வாழ்கின்றனர் என்பது தெரிய வந்திருக்கிறது. எப்போதும் சந்தோஷத்தில் மிதப்பது இளைஞர்கள் என்ற கருத்து தவறானது என்பது இத்தால் தெரியவந்தது.

தங்கள் ஆய்வு முடிவிலிருந்து, 20 வயதில் அனுபவிக்கும் சந்தோஷங்கள் படிப்படியாக அதிகரித்து 70களில் உச்சத்தை எட்டுவதாக அந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உத்தியோக ஓய்வுக்குப் பிறகு வாழ்க்கை கசக்கும் என்ற கருத்து இதன் மூலம் தகர்க்கப்பட்டுள்ளது.

இளம் வயதில் எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும். நிறைய கனவுகள். அனைத்தும் பலிப்பதில்லை. அதனால் ஏமாற்றம். வயது ஏறும்போது மனம் முதிர்ச்சி அடைகிறது. சாத்தியமானதை மட்டுமே எதிர்பார்க்கிறது. ஏமாற்றம் குறைகிறது. அதனால் தன்னம்பிக்கை வலுக்கிறது. இழந்ததை எண்ணிக் கவலைப்படாமல், இருப்பதைப் பார்த்து திருப்தி அடைகிறது. அதில் மகிழ்ச்சி நிறைகிறது.

"உனக்கென்ன குறைச்சல் நீ ஒரு ராஜா! வந்தால் வரட்டும் முதுமை! தனக்குத் தானே துணை என நினைத்தால் உலகத்தில் ஏது தனிமை?"

- ஆசிரியர்

# போலி நாணயத்தாள் குறித்து பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

போலி நாணயத்தாள்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென பொலிஸார் பொதுமக்களை தற்போது போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளது. 5000 ரூபா போலி நாணயத்தாள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று அதிகாலை அளுத்கம எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் 5000 ரூபா பணம் கொடுத்து 500 ரூபாவிற்கு எரிபொருள் நிரப்ப மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் முயற்சித்துள்ளார். போலி நாணயத்தாள் பற்றி எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர் குறிப்பிட்டதனை அடுத்து குறித்த நபர், தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலி நாணயத்தாள்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சியில் திருட்டு 30 ஆயிரம் வரை இழப்பு

வல்வெட்டித்துறை நெடியகாட்டுப் பகுதியிலுள்ள வியாபார நிலையத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய உபபொலிஸ் பரிசோதகர் எம்.எம்.ஈ.திஸ்ஸ பண்டார தெரிவித்தார்.

மேற்படி வியாபார நிலையத்தின் கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிக் கொண்டு பின்பக்கக் கதவு வழியாகச் சென்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், திருட்டுக்கு பயன்படுத்திய துவிச்சக்கரவண்டியொன்றினையும், அதில் கட்டப்பட்டிருந்த இரண்டு அரிசி மூடைகளையும் மீட்டதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது, கடையிலிருந்த பால்மா பெட்டிகள், சவர்க்காரங்கள், மண்ணெண்ணெய் மற்றும் அரிசி மூடைகள் திருடப்பட்டுள்ளன.

இதன்போது, அரிசி மூடைகளை துவிச்சக்கர வண்டியில் கட்டி வைத்துவிட்டு மிகுதிப் பொருட்களை கொண்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில் அதிகாலை 3 மணியளவில் கடலுக்குச் செல்வதற்காக அப்பகுதியினால் வந்த மீனவர்கள், துவிச்சக்கரவண்டியில் அரிசி மூடைகள் கட்டப்பட்டிருப்பதனை அவதானித்து உரிமையாளருக்கு விடயத்தினைத் தெரியப்படுத்தினர்.

உடனடியாக உரிமையாளர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிற்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, பொலிஸார் அவ்விடத்திற்கு வந்து துவிச்சக்கரவண்டியினை மீட்டதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மசகு எண்ணெய் இருப்பு 15 தினங்களுக்கு மாத்திரமே

**கனியவள கூட்டுத்தாபனம் அறிவிப்பு**

(கொழும்பு)

எரிபொருள் தயாரிப்புக்காக எதிர்வரும் 15 தினங்களுக்கு மாத்திரம் மசகு எண்ணெய் இருப்பில உள்ளதாக கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. எனினும், நாட்டில் அன்றாட தேவைகளின் பொருட்டு போதுமான எரிபொருள் உள்ளதாக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்திற்கு ஆழ்கடலில் இருந்து மசகு எண்ணெய்யை விநியோகிக்கும் பாரிய குழாயில் அண்மையில் வெடிப்பு ஏற்பட்டது. குறித்த குழாயை மீளமைக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார். 9 கிலோமீற்றர் தொலைவில் நங்கூரம் இடப்பட்டுள்ள கப்பலில் இருந்து 100 அடிகள் ஆழத்தில் உள்ள குழாய் மூலமாக ஒருகொடவத்தைக்கு எரிபொருள் எடுத்துச்செல்லப்படுகின்றது.

பாரிய கடல் அலைகளின் தாக்கம் காரணமாக குழாய் மீளமைப்புப் பணிகளை மேற்கொள்வதில் அசௌகரியம் எதிர்நோக்கப்படுவதாக கனியவளக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்தார்.

# பேருவளைக்கு பிரதமர் விஜயம்

பேருவளையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடுவதற்காக பிரதமர் தி.மு. ஜயரட்ண அங்கு சென்றிருந்தார்.

இந்நிலையில், அளுத்கம மற்றும் பேருவளையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# புதுக்குடியிருப்பு சந்தைக்கான அடிப்படைவசதிகள் பூர்த்தி செய்யப்படும்

**- கூறுகிறார் பிரதேச சபைச்செயலாளர் -**

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு சந்தைக்கான அடிப்படை வசதிகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படுமென புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.மிதிலைநாதன் தெரிவித்தார்.

இச்சந்தை எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி இருப்பதுடன், சந்தைக்கான கட்டடத்தொகுதி இல்லாமையால் வியாபாரம் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில.

இச்சந்தைக் கட்டடம் அமைப்பதற்கு 2012ஆம் ஆண்டு அரசசார்பற்ற நிறுவனமொன்றிலிருந்து 5 மில்லியன் ரூபா கிடைத்தது. எனினும், சந்தை அமைப்பதற்கு சொந்தக் காணி இல்லாமையால் குறித்த நிதி திரும்பிச் சென்றது.

இந்நிலையில், 2013 ஆம் ஆண்டு தொடக்கத்தில் புதுக்குடியிருப்பு வாழ் அன்பர் ஒருவர் சந்தை அமைப்பதற்கு தனது 2 ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கினார். இருப்பினும், இக்காணியில் சந்தைக் கட்டடம் அமைப்பதற்கு நிதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், இக்காணியில் வர்த்தகர்கள் தாமாகவே வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், சந்தைக்குத் தேவையான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை பிரதேச சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# வருடாந்த மஹோற்சவம்

நல்லூர் ஆடியபாதம் வீதி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களும் நடைபெறுகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 9 மணிக்கு ஆலய முன்றலில் பூமிதிப்பு வைபவம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 23ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு தேர்த்திருவிழாவும் 25 ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் காலை 7 மணி முதல் 8 மணிவரை அபிஷேகமும் 8 மணிக்கு தம்பபூசையும், 9 மணிக்கு வசந்தமண்டப பூசையும் 9.30 மணிக்கு அம்பாள் உள்வீதி உலாவும் இடம்பெறுவதுடன் தினமும் மாலை 5 மணிக்கு அபிஷேகமும், 6 மணிக்கு ஸ்தம்ப பூசையும், 7மணி தொடக்கம் 7.30 மணி வரை தெய்வீக சொற்பொழிவும் இரவு 8 மணிக்கு அம்பாள் வீதியுலாவும் இடம்பெறும்.



**வடமாகாண சபையை நிர்வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாகாண சபை நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தும் திறனற்றவர்களாக வேறு பிரச்சினைகளில் அக்கறை செலுத்தி வருகின்றனர். இதன் மூலம் மக்களின் எதிர்பார்ப்பைச் சிதறடித்துள்ளனர். மறுபக்கத்தில் அரசாங்கம் மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை வழங்குவதில் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை முறையாக வழங்கினாலே தமிழ் பேசும் மக்களின் கணிசமான பிரச்சினைகள் தீர்வதுடன், முழு இலங்கை மக்களுக்கும் பிராந்திய ரீதியிலான அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்படும் என்பதை கணக்கில் எடுக்கத் தவறியுள்ளது அரசாங்கம். அரசாங்கத்தின் இந்தப் போக்கு இனப்பிரச்சினையைத் தீரவிடாமல் செய்து, அதை வைத்தே தமது அரசியல் பிழைப்பைக் காலம் காலமாக நடாத்தி வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நல்லதொரு வரப்பிரசாதமாக அமைந்து இருக்கின்றது.**

# 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோருவதே இன்றைய உடனடித் தேவை!

■ வானவில் 40 இதழ் தலையங்கத்திலிருந்து

**இலங்கையின்** இனப்பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சிலர் இப்பிரச்சினை இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் உருவான ஒன்று எனச் சித்தரிக்க முயல்கின்றனர். உண்மையில் அது அப்படியல்ல. இலங்கையின் இனப்பிரச்சினை என்பது இலங்கையை தமது காலனித்துவ நாடாக நீண்ட காலம் வைத்திருந்த பிரித்தானியர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்று.

கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி என்ற போர்வையில் இந்தியாவில் காலடி எடுத்து வைத்த பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் படிப்படியாக இந்தியாவைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து அடிமைப்படுத்தியதுடன், இலங்கையையும் தமது காலனி நாடாக்கிக் கொண்டனர்.

ஒரு காலத்தில் இலங்கையை விட்டுப் போனாலும் தமது ஆதிக்கம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காக பிரித்தானியர்கள் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்தனர். அதில் முக்கியமான ஒன்று இலங்கையில் தமிழ் - சிங்கள இனங்களிடையே முரண்பாட்டை உருவாக்கியது.

அவர்கள் 1948 பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் என்ற போர்வையில் இலங்கையை தமது அரைக்காலனி நாடாக்கிவிட்டு வெளியேறிய போது, தமக்கு விசுவாசமான ஐக்கிய தேசியக் கட்சியிடமே ஆட்சியை ஒப்படைத்து விட்டுச் சென்றனர். அத்துடன் தம்மால் உருவாக்கப்பட்ட தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வையும் ஏற்படுத்தாமலும் விட்டுவிட்டுச் சென்றது தற்செயலான நோக்கில் அல்ல.

பிரித்தானியரிடமிருந்து ஆட்சியைப் பெற்றுக்கொண்ட டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க அரசு, வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தது. அத்துடன் மலையகப் பெரும் தோட்டங்களில் நவீன கொத்தடிமைக் கூலிகளாக வைக்கப்பட்டிருந்த தமிழ் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்கள் ஆக்கியது.

அதன் பின்னர் 1956இல் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்காவினது அரசினாலும், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாமல் போய்விட்டது. அதுமாத்திரமின்றி ஐ.தே.க கிளப்பிய தனிச்சிங்களக் கோசத்துக்குப் போட்டியாக அவரது அரசு கொண்டு வந்த தனிச்சிங்களம் மட்டும் சட்டம் நிலைமையை மேலும் மோசமாக்கியது.

ஆனால் ஒரு கட்டத்தில் நிலைமையை உணர்ந்து கொண்ட பண்டாரநாயக்க, தமிழரசுக் கட்சித் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்கும் பிராந்திய சபைகளை உருவாக்கும் பொருட்டு "பண்டா - செல்வா ஒப்பந்தம்" என்னும் உடன்படிக்கையைச் செய்தார். ஆனால் அதை நடைமுறைப்படுத்த விடாமல் ஐ.தே.க. பௌத்த குருமாரைக் கொண்டு குழப்பங்களை உருவாக்கி அதைக் கிழித்தெறிய வைத்தது. மறுபக்கத்தில் தமிழரசுக் கட்சியும் தனது அரசியல் இருப்புக்காக அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாமல் பார்த்துக் கொண்டது.

இந்த நிலைமைகளின் பின்னணியில் 1958இல் சுதந்திர இலங்கையின் முதலாவது இன வன்செயலை இனவாதிகள் அரங்கேற்றி வைத்தனர். அதன் பின்னர் 1977, 1981, 1983 என தொடர்ச்சியாக காலத்துக்குக் காலம் இனவன்செயல்கள் இனவாத சக்திகளால் அரங்கேற்றப்பட்டு வந்துள்ளன. இந்த இன வன்செயல்கள் எல்லாவற்றுக்கும் ஐ.தே.கவே பின்னணியில் இருந்து செயற்பட்டு வந்துள்ளது.

1977இல் அமோக வெற்றியுடன் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க அரசு மாவட்ட அபிவிருத்திச் சபைகளை உருவாக்கப் போவதாக அறிவித்து அதற்குத் தேர்தல்களையும் நடாத்தியது. ஆனால் யாழ்.மாவட்ட சபைத் தேர்தலின் போது ஐ.தே.க. தெற்கிலிருந்து குண்டர்களைக் கொண்டு சென்று அந்தத் தேர்தலைக் கேலிக்கூத்தாக்கியதுடன், யாழ்.பொது நூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், யாழ்.எம்.பி. யோகேஸ்வரனின் வீடு, யாழ்.நகரக் கடைகள் என்பனவற்றை எரித்து யாழ்ப்பாணத்தைச் சுடுகாடாக்கியது.

அதுமாத்திரமின்றி, ஜே.ஆரின் அரசு அதன்பின்னர் தமிழ் மக்களின் மேல் இராணுவ ஒடுக்குமுறையையும் கட்டவிழ்த்துவிட்டது. இந்தப் பின்னணியிலேயே தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகியது.

ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்து அதை ஒடுக்க ஜே.ஆரின் அரசு அமெரிக்காவின் உதவியை நாடிச்சென்ற சூழலிலேயே இந்தியா தலையிட்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசியல் சாசனத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை உருவாக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபைகள் அமைக்கும் திட்டத்திற்கு வழிவகுத்தது. அதன் அடிப்படையில் 9 மாகாணங்களிலும் மாகாணசபைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

அதிலும் கூட பிரேமதாசவின் ஐ.தே.க. அரசு ஒன்றிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைத்ததுடன், இந்திய - இலங்கை உடன்படிக்கையையும் முடக்கி வைத்தது. அதன்பின்னர் நீதிமன்றத்தின் மூலம் ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபை இரண்டாகப் பிரிக்கப்பட்டும் விட்டது.

எது எப்படியிருந்த போதும் நீண்டகாலமாக செயற்படாமல் இருந்த வடக்கு மாகாணசபைக்கும் தேர்தல் நடாத்தப்பட்டு அதுவும் செயற்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. அதாவது தற்போது 9 மாகாணசபைகளும் செயற்படும் நிலையில் உள்ளன.

ஆனால் தற்போது பிரச்சினை என்னவெனில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வாக அமைக்கப்பட்ட மாகாணசபைகளின் செயற்பாடுகளில் - குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணசபைகளின் செயற்பாடுகளில் - ஏற்பட்டுள்ள செயலற்ற நிலைமைதான். குறிப்பாக கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற வடமாகாணசபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் அதன் நிர்வாகம் நடந்து கொள்ளும் முறைதான். அந்தச் சபையை நிர்வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாகாண சபை நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தும் திறனற்றவர்களாக வேறு பிரச்சினைகளில் அக்கறை செலுத்தி வருகின்றனர். இதன் மூலம் மக்களின் எதிர்பார்ப்பைச் சிதறடித்துள்ளனர்.

மறுபக்கத்தில் அரசாங்கம் மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை வழங்குவதில் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை முறையாக வழங்கினாலே தமிழ் பேசும் மக்களின் கணிசமான பிரச்சினைகள் தீர்வதுடன், முழு இலங்கை மக்களுக்கும் பிராந்திய ரீதியிலான அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்படும் என்பதை கணக்கில் எடுக்கத் தவறிய அரசாங்கம், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற ஒற்றை வழிப் பாதையையே மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. அரசாங்கத்தின் இந்தப் போக்கு இனப்பிரச்சினையைத் தீரவிடாமல் செய்து, அதை வைத்தே தமது அரசியல் பிழைப்பைக் காலம் காலமாக நடாத்தி வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நல்லதொரு வரப்பிரசாதமாக அமைந்து இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கென காலத்துக்குக் காலம் முன் வைக்கப்பட்ட பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், ஜே.ஆரின் மாவட்ட அபிவிருத்திச் சபைகள், சந்திரிகாவின் தீர்வுப்பொதி என எல்லாமே தமிழ் - சிங்கள இனவாத சக்திகளின் கைங்கரியங்களால் தோல்விகண்ட நிலையில், இந்திய - இலங்கை ஒப்பந்தம் மட்டுமே 27 வருடங்களாக நின்று பிடித்து வருகின்றது. அதற்குக் காரணம் அந்த ஒப்பந்தம் வலிமைமிக்க இந்திய அரசின் முயற்சியால் உருவாக்கப்பட்டதால் ஆகும்.


அதுமாத்திரமின்றி தமிழ் மக்களின் பெரும்பாலான பிரச்சினைகளின் தீர்வுக்கும் 13ஆவது திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. எனவே அதை முழுமையாக அமுல்படுத்தச் சொல்லிக் கோருவதே தமிழ் மக்களுக்கு இன்றைய நிலையில் மிகவும் பயனுள்ள செயற்பாடாகும். "நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நம்பிக்கை இல்லை, அதற்கு வரமாட்டோம்" எனக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும்படி கூட அரசைக் கோராமல் இருந்து வருவதுடன், புலம்பெயர் புலிச் சக்திகளினதும், மேற்கு நாடுகளினதும் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளுடன் கைகோர்த்துச் செயற்படுவது அவர்களுக்கு இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை இல்லை என்பதையும், அவர்களது கபட நோக்கத்தையுமே எடுத்துக் காட்டுகிறது.

எனவே தனித்தமிழீழம், நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற எதிரும் புதிருமான துருவ நிலைப்பட்ட இழுபறிகளுக்கு மாற்றாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்யக்கோரி மக்கள் இயக்கத்தை உருவாக்குவதே இன்றைய சூழலில் அவசியத் தேவையாகும். அப்படியான ஒரு கோரிக்கையை இந்தியாவில் அதிகாரத்துக்கு வரும் எந்தவொரு அரசும் கூட ஆதரிக்கக் கூடிய சூழல் உள்ளது.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி பலதரப்பட்ட மக்கள் இயக்கங்களை முன்னெடுப்பதே தமிழ் ஜனநாயக சக்திகளின் முன்னால் உள்ள இன்றைய தலையாய கடமையாகும். ●

# வெளிச்சக்திகள் தலையிடும் முயற்சி எதிர்த்து இணைந்து செயற்படவேண்டும்

## நமீபியாவை அழைக்கிறார் ஜனாதிபதி



நியாயப்படுத்த முடியாத வெளிச்சக்திகள் உட்பட்ட தடைகளை வெல்வதற்கு இணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி, நமீபிய பிரதமர் ஹேகே கீயிங்கோப்பிடம் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு தலையீடுகளுக்கு உள்ளான நாடுகளின் நிலைமைகள் முன்பிருந்ததை விட மோசமாகியுள்ளது. அவற்றில் குழப்பம் ஏற்பட்டதே கண்ட விளைவாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் நமீபிய பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு, பொலிவியாவிலுள்ள லொஸ் தாஜிபொஸ் ஹோட்டலில் இடம்பெற்றதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ராஜபக்ஷ ஜி 77 நாடுகளின் பொன்விழா கொண்டாட்டத்துக்காக பொலிவியாவுக்குச் சென்றுள்ளார். யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் பற்றி ஜனாதிபதி, நமீபிய பிரதமருக்கு விளக்கினார். அவர் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தல், முன்னாள் போராளிகளுக்கு புனர் வாழ்வளித்தல், சமூகத்துடன் இணைத்தல், முன்னைய சிறுவர் போராளிகளை விடுவித்தல் ஆகிய விடயங்களில் இலங்கை அதிகளவில் வேலை செய்துள்ளதென கூறினார்.

நாம் வடமாகாண சபைத் தேர்தலை நடாத்தினோம். நாம் தேசிய நல்லிணக்கத்துக்காக ஆணைக்குழுக்களை நியமித்துள்ளோம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு, காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிபபதற்கான ஜனாதிபதி ஆணைக் குழு என்பனவையே அவையாகும்.

மக்கள் சமாதானமாக வாழ்கின்றனர். அரசியல்வாதிகளும் நாட்டுக்கெதிராக இயங்குவோருமே கவலை யடைந்துள்ளனர். என ஜனாதிபதி தெரிவித்தார்.

நமீபிய பிரதமர், தனது நாட்டில் முகங்கொடுக்கும் இதே போன்ற நிலைமையை விளக்கினார். இலங்கை, நமீபியாவுக்கு வழங்கிய உதவிக்காக ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்தார்.

# ஐ.நா. விசாரணைகளுக்கு ஆதரவளிக்கப்போவதில்லை

## அமைச்சர் திஸ்ஸ



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் இலங்கை தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். யுத்த குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்கு அனுமதியளிக்கப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரளிக்கக் கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் தனித்து வெற்றிகொள்ளப்பட்டதாகவும் உள்விவகாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். உள்விவகாரப் பிரச்சினைகளுக்கு புறச்சக்திகளின் தலையீடு அவசியமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# பேஸ்புக் தொடர்பில் அதிகரித்த முறைப்பாடுகள்

வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் முகநூல் (பேஸ்புக்) தொடர்பில் அதிகரித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.கணினி அவசர பதிலளிப்பு மையம் இதனைத் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் முகநூல் தொடர்பில் 900 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.இவற்றுள் அதிக முறைப்பாடுகள் போலி முகநூல் கணக்குகள் தொடர்பானவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தற்பாதுகாப்புக்கு ஆயுதங்கள் பயன்படுத்துவது குறித்து விளக்கம்

## அஜித் ரோஹண

(கொழும்பு)

ஆயுதங்களை எவ்வாறு பயன்படுத்துவது எந்தெந்த நேரங்களில் தற்பாதுகாப்பு அடிப்படையில் ஆயுதங்களை பயன்படுத்துவது என்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதுடன், பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகபேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் அச்சமடைந்துள்ளதாகவும் குறிப்பாக இரவு நேரங்களில் வீதிச் சோதனைச் சாவடிகளில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் மற்றும் குற்றவாளிகள் தாக்குதல் நடத்தக் கூடுமென அச்சமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் குருணாகல் பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிர்வாணப் படுத்தப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டதில் ஒரு உத்தியோகத்தர் கொல்லப்பட்டிருந்தார். இவ்வாறான சமப்வங்களின் மூலம் பொலிஸ் உத்தியோகத் தர்கள் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் அவர்களுக்கு கைத்துப் பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# புத்தளம் சிலாபம் மீனவர்கள் பகிஷ்கரிப்பு

மீனவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் இடை நிறுத்தபட்டுள்ளதைக் கண்டித்து இயந்திரப படகு மூலம் கடற்றொழிலில் ஈடுபடும் புத்தளம் சிலாபம் மீனவர்கள் நேற்று கடற்றொழிலுக்கு செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடலுக்கு செல்லாத மீனவர்கள், தமது வலைகளை பழுது பார்க்கும் நடிவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் இதேவேளை, நீர்கொழும்பு பிரதேசங்களில் உள்ள மீனவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களுடைய பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்காவிடில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபடப்போவதாக மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

# இலங்கைக்கு எதிராக வரலாம் பொருளாதாரத் தடைகள்

## கூறுகிறார் சஜித் பிரேமதாச



இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். வீரகெட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், இந்த விசாரணை முடிவில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளினால் வழங்கப்பட்டு வரும் சந்தை வாய்ப்புக்கள் இலங்கைக்கு முடக்கப்பட்டால் பாரியளவில் நெருக்கடி நிலைமைகள் ஏற்படக்கூடிய அபாய நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிட்டுளளார். யுத்த நிறைவின் பின்னர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஆளும் கட்சி முனைப்பு காட்டத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு அரசாங்கமே பொறுப்பு என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். யுத்த நிறைவின் பின்னர் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்த போதிலும், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான கொள்கைகள் கிடையாது எனவும், யுத்த வலயம் உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படவில்லை எனவும் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

# பேருந்து விபத்து 20 பேர் காயம்

அநுராதபுரம் - கொக்கரல்ல - மடகல்ல பிரதேசத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 20இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.அவர்கள் குருணாகலை மற்றும் கொக்கரல்ல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பயணிகள் பேருந்தொன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந் தமையாலேயே இந்த அனர்த்தம் நேர்ந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# சட்டவிரோதமாக தங்கியுள்ள பாகிஸ்தான் பிரஜைகள் கைது



சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருக்கும் பாகிஸ்தான் பிரஜைகளை கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்று தருவதாகக் கூறி தரகர்கள், பெருமளவிலான பாகிஸ்தானியர்களை இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களை கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்துள்ளனர்.

வருடக்கணக்கில் இவர்களை இலங்கையில் தங்க வைத்து சமூக விரோத செயற்பாடுகள் மற்றும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய இரகசியமான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என்பதால், திணைக்களம் இந்த விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறு பல வருடங்கள் தங்கியிருந்த 102 பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவளை அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்துள்ள பாகிஸ்தான் பிரஜைகள் இரவு நேரத்தில் குறைந்த கூலிக்கு தொழில் புரிந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையில் ஆயிரத்து 900 பாகிஸ்தானியர்கள் தம்மை அகதிகளாக பதிவு செய்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

# வடமாகாணத்துக்கு பெருமை சேர்க்கும் பாடசாலையாக அருணோதயாக் கல்லூரி

## கல்வி அமைச்சின் செயலாளர் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு விளையாட்டுத்துறையில் பெருமை சேர்க்கும் கல்லூரியாக அளவெட்டி அருணோதயாக்கல்லூரி விளங்குகின்றது. எமது வடமாகாணத்தின் விளையாட்டின் உயர்விற்கு இப்பாடசாலை காரணமாகவுள்ளதுடன் விளையாட்டின் மூலம் எமது மாகாணத்திற்கு பெருமை சேர்க்கின்ற கல்லூரியாகவும் அருணோத யாக் கல்லூரி விளங்குகின்றது என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் 120 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கல்லூரியின் புதிய கட்டித் திறப்பு விழாவும் அருணோதயம் நூல் வெளியீட்டு விழாவும் கல்லூயின் அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ரீதியாக நாம் பெறுகின்ற வெற்றியில் அரைப்பங்கு இக்கல்லூரியினுடையதாகும். இக்கல்லூரி கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுதுறையிலும் முன்னேற்றமடைந்து வருகின்றது. இணைப்பாடவிதான செயற்பாட்டில் போட்டியிட்டு மாணவர்கள் தமது திறமையினை வெளிப்படுத்தியுள்ளனர். இச்சாதனைக்கு பக்கபலமாக அதிபரும் கல்லூரியின் ஆசிரியர்களும் விளங்குகின்றனர்.

எம்மிடையே உள்ள நிதியினை பாடசாலைகள் ஆலயங்கள் என்பவற்றிற்கு உதவ வேண்டும் எனும் நோக்கில் உலகெங்கிலும் உள்ள பழைய மாணவர்கள் இசை நிகழ்ச்சிகளினை நடத்தி இக்கட்டத்தினை அமைத்து பெறுமதிவாய்ந்த கல்விப்பணிக்குரிய செயற்பாட்டினை மேற்கொண்டுள்ளனர்.

இக்கல்லூரிச் சமூகத்தில் இருந்து நேர்மனப்பாங்கு கொண்ட கல்விமான்கள் அறிஞர்கள உருவாக வேண்டும் என்றார். (63)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு உதயநகர் அருள்மிகு அண்ணமார் ஆலய அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் இறுதி நாளான எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேக ஆராதனை இடம் பெற்று அன்றைய தினம் ஆலய வாசலில் தீ மிதிப்பு, காவடி, பாற்செம்பு எடுத்தல் போன்ற நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (51)

## முரசின் இன்றைய பலன்



(17.06.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் ஆனி மாதம் 03 ஆம் திகதி.
சித்தம் / பஞ்சமி.
திருவோண நட்சத்திரம் மு.ப.07.47வரை. பின் அவிட்டம்.
இராகு காலம் 02.53 -04.23 வரை. சுபநேரம் 10.23- 11.53வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வாய்ப்புக்களைத் தவறவிடாதீர்கள். நடப்பதெல்லாம் நன்மைக்குத்தான் என்று நினைத்துப் பொறுமையைக் கடைப்பிடிக்கும் நாள். |
| ரிஷபம் | நாட்டின் எல்லைகள் கடக்கும் போது பிழபடாமல் காரியம் நிறைவேறல். காப்பாற்றிப்பாதுகாப்பதற்காக பொய் கூறும் நிலைக்கு ஆட்பட்டதால் ரகளை அற்றுப்போதல். |
| மிதுனம் | வெளிநாட்டுப்பயணம் முகவரின் திருவிளையாடலால் இடைத்தங்கல் நாட்டில் இறக்கிவிடல். புண்ணிய நிகழ்வில் ஈடுபட்டு மன அமைதியைப் பெறல். |
| கடகம் | பயணமுயற்சி எதிர்பாராமல் இடைத் தங்கல் நாடொன்றில் இறக்கிவிடலாம். மக்களைப்பற்றி செவிகுளிரும் வண்ணம் செய்திகள் வந்தடையும். |
| சிம்மம் | நோயினால் பெற்றோரின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் வெளிநாட்டு முயற்சியை தற்காலிகமாக ஒத்திவைத்தல். |
| கன்னி | பிறரின் மனநிலையை எடை போட்டுக்கரும மாற்ற முயலுங்கள். வேலைப்பளு தேங்கியதால் முடித்து வைக்க முடியாது திணறவேண்டியிருக்கும். |
| துலாம் | பரீட்சை முடிவு பாதகமாக இருந்ததால் கல்விப்புலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல். நல்லவர் என நினைத்த ஒரு நபர் உங்களுக்கெதிராகச் சதி செய்யலாம். |
| விருச்சிகம் | பலவேலைகளும் தலையில் சுமத்தப்படுவதினால் நிறைவேற்றுவதில் பதகளிப்பு தோன்றலாம். திட்டமிட்டுச் செயற்பட்டதினால் காரியங்கள் வெற்றி. |
| தனுசு | நிலுவையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வாய்த்தர்க்கம் முற்றி காவல்துறைக்கு செல்ல முயலல். உடன் பிறந்தோர் உங்கள் கருத்துக்களை ஏற்றுச்செயற்படுவர். |
| மகரம் | தேவைகளை நிறைவு செய்ய கடன்படும் நிலையில் இருத்தல். புதிய மனையை அமைப்பதற்கு ஏற்ற இடம் எதுவென அறிய சோதிடரை நாடுதல். |
| கும்பம் | திருமணத்திற்கு பச்சைக்கொடி காட்டல். இடமாற்றம் சம்பந்தமான கருணை மனு நிராகரிக்கப்பட்டதால் கவலை கொள்ளல். |
| மீனம் | வெளிநாட்டுத் தொடர்பான விடயங்கள் அனுகூலம் கிட்டும் நிலையேற்படல். குடும்பத்தில் நிலவிக்காணப் பட்ட பிரச்சினைகள் தீர்த்தல். |

## விண்ணப்பங்கோரல்

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள், அபிவிருத்தி அமைச்சின் தொழில்நுட்ப கல்விப் பயிற்சித் திணைக்களத்தில் இலத்திரனியல், கட்டடத் தொழில், மோட்டார் இயந்திரம், மரவேலை, தொழில்நுட்பவரைவு, குளிர்சாதனம், மின்னியல், கணனித்தொழில் நுட்பவியல், வணிகம், உலோகம், ஆபரண வடிவமைப்பு, விவசாயம், சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகியவற்றுக்கான போதனாசிரியர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று இரண்டு வருட அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் யூலை மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏற்பாடு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். (105)

## தெரிவுக் குழுக்கூட்டம்

கம்பன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவுக்குழுக்கூட்டம், கம்பன் முன்பள்ளி நிலைய மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி.மாலினி தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்திற்கு நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் கலந்து கொண்டு தெரிவித்ததாவது,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழி காட்டலின் மூலம் நாங்கள் எமது பிரதேச அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகிறோம். அத்துடன் பொருளாதார அமைச்சின் மூலமாக 50 மில்லியன் பிரதேச அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.



## குருப்பெயர்ச்சி பலாபலன்கள்

(13.06.2014 முதல் 04.07.2015 வரை)

### கும்பம்



(அவிட்டம் 3, 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதம்)

**துணிவுடன் முடிவெடுக்கும் கும்பராசிக் காரர்களே!**

குருபகவான் ராசிக்கு 5 இல் இருந்து நன்மையளித்துக் கொண்டிருந்தார். இதனால், குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். கையிலும் பணப்புழக்கம் இருக்கும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சி சிறப்பாக நடந்திருக்கும். பிள்ளைகளின் செயல்பாடுகளால் பெருமை கிடைத்திருக்கும். பெண்களால் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருப்பீர்கள். இந்த நிலையில் குரு பகவான் ராசிக்கு 6 இல் அடியெடுத்து வைக்கிறார். இது சாதகமான நிலை என்று சொல்ல முடியாது. 5 இல் இருந்தது போல நற்பலனை அவரால் செய்ய முடியாது. அதே நேரம் ஒரேயடியாக பிற்போக்கான பலன் ஏற்படும் என்று பயப்படத் தேவையில்லை.

6 இல் இருக்கும் குருவால் உடல்நலத்தை பாதிக்கலாம். மனதில் தளர்ச்சியை உருவாகும். அவரது 9 ஆம் பார்வை மீனத்தில் விழுவதால் பல்வேறு நன்மை கிடைக்கும். எந்த இடையூறையும் முறியடித்து வெற்றி காண்பீர்கள். உங்களையும் அறியாமல் அபரிமிதமான ஆற்றல் அவ்வப்போது வெளிப்படும். அதனைக் கண்டு பகைவர்களும் அஞ்சும் நிலை உருவாகும். தனிப்பட்ட ஜாதகத்தில் தசாபுத்தி சிறப்பாக இருந்தால் இன்னும் சிறப்பான பலன் கிடைக்க வாய்ப்பு உண்டு. ஆறாம் இட குருவால் வீண் செலவு அதிகரிக்கும். முயற்சியில் தடைகள் குறுக்கிடும். தீவிர முயற்சி எடுத்தால் மட்டுமே செயலை நிறைவேற்ற முடியும்.

கடகராசியில் இருக்கும் உச்சக்குருவின் 5, 7, 9 ஆம் பார்வை முறையே 2,10,12 ஆகிய ராசிகளில் பதிகிறது. இதனால், வாழ்வில் பல நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் கணவன், மனைவி இடையே கருத்துவேற்றுமை ஏற்படும் சமயத்தில், குருவருளால் விரைவில் பிரச்சினை தீரும். பணப்பற்றாக்குறை ஏற்பட்ட சமயத்தில் கூட அதிர்ஷடகரமாக பணம் ஒருவழியில் வர வாய்ப்புண்டு. பணியில் திறமை பளிச்சிடும் விதத்தில் செயல்படுவீர்கள். பன்னிரண்டாம் வீடான மகரத்தில் குருவின் நேரடியான ஏழாம் பார்வை விழுவதால், சுபவிரயம் ஏற்பட வாய்ப்புண்டு. குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்திட யோகமுண்டு.

**பணியாளர்கள்:**

பணியாளர்கள் சீரான வளர்ச்சி காண்பர். கடந்த காலத்தை விட பணிச்சுமை அதிகரிக்கும். அலைச்சல் இருக்கும். அதே நேரம் சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்றவை கிடைக்கும். அதிகாரிகளிடம் அனுசரித்து போக வேண்டிய கட்டாயம் உருவாகலாம். சிலருக்கு பணி, இடமாற்றம் ஏற்படலாம். அதிக முயற்சி செய்தால் புதிய வேலையும் கிடைக்கும்.

**பெண்கள்:**

பெண்கள் குடும்பச் செலவுக்கு அவ்வப்போது திண்டாட நேரிடும். சிக்கனமாக செலவழிப்பது நன்மையளிக்கும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து கவலை கொள்ள வாய்ப்புண்டு. கணவரின் சொல்லுக்கு கட்டுப்படுவது பிரச்சினையைத் தவிர்க்க உதவும். பணிக்கு செல்லும் பெண்களுக்கு பணிச் சுமை அதிகரிக்கும்.

**கலைஞர்கள்:**

புதிய ஒப்பந்தங்கள் விடா முயற்சியின் பேரில் கிடைக்கும். எதிர்பார்த்த மதிப்பு, பாராட்டு போன்றவை கிடைக்காமல் போகலாம்.

**மாணவர்கள்:**

தீவிர முயற்சி எடுத்தால் தான் நல்ல முன்னேற்றம் பெற முடியும். படிப்பில் கவனம் செலுத்த முடியாத சூழ்நிலை உருவாகலாம்.

**குரு அதிசார பலன்!**

குருபகவான் டிசம்பர் 3 இல் அதிசாரம் பெற்று சிம்ம ராசிக்கு மாறுகிறார். 22 ஆம் திகதி வரைஅதில் இருப்பார். இந்த காலத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சுப நிகழ்ச்சியை நடத்திட வாய்ப்புண்டு. சமூகத்தில் செல்வாக்கு மேம்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வீட்டுத் தேவை அனைத்தும் பூர்த்தியாகும். சிலருக்கு பதவி உயர்வு உண்டாகும்.

**பரிகாரம்!**

விநாயகரையும், இலட்மியையும் வணங்கி வாருங்கள். நவக்கிரகங்களை தொடர்ந்து வலம் வந்து வழிபடுங்கள். காக்கைக்கு அன்னமிட்டு உண்ணுங்கள். வியாழக்கிழமை தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள். முருகன் கோவிலுக்கு சென்று வாருங்கள். தட்சிணாமூர்த்திக்கு 21 தீபம் ஏற்றி வழிபடுங்கள். சனி பகவானும் சாதகமற்ற நிலையில் இருக்கிறார். அவரின் அருளை பெற சனிக்கிழமை சனீஸ்வரனுக்கு நல்லெண்ணை தீபம் ஏற்றுங்கள்.

உலகளந்த திருமாலின் வலமார்பில் உறைபவளே! உலகமெலாம் காத்து நிற்கும் தேவி மகாலட்சுமியே! உலகெங்கும் ஆட்சி செய்யும் அஷ்டலட்சுமி தாயே! உன் பாதம் சரணடைந்தோம் நலம் தருவாய் அம்மா! எனத் துதிசெய்யுங்கள்.

# உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் திருவிழா



## சுவிஸ்சர்லாந்து த்ரில் வெற்றி

(பிரேசிலியா)

ஈகுவடோர் அணிக்கெதிரான பரபரப்பான போட்டியில் சுவிஸ்சர்லாந்து அணி இறுதி நேரத்தில் வெற்றியைப் பதிவாக்கியது.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் சுவிஸ்சர்லாந்து, ஈகுவடோர் அணிகளுக்கிடையிலான ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு நடைபெற்றது.

ஆட்டம் ஆரம்பமாகி 22ஆவது நிமிடத்தில் ஈகுவடோர் அணியின் வொலன்சியா, பந்தை தலையால் முட்டி ஒரு கோல் அடித்தார். இதற்குப் பதிலடி கொடுக்க சுவிஸ்சர்லாந்து அணி கடும் முயற்சி எடுத்தபோதும் பலனளிக்கவில்லை. முதல் பாதி முடிவில் ஈகுவடோர் 1-0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் சுவிஸ்சர்லாந்து வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடினர். 48ஆவது நிமிடத்தில் சுவிஸ்சர்லாந்து அணியின் அட்மிர் மெகமதி, தலையால் முட்டி ஒரு கோல் அடித்தார். போட்டியின் கடைசி 30 வினாடிகள் இருந்தபோது செபரோவிச் (90ஆவது நிமிடத்தில்) மின்னல் வேகத்தில் அருமையான கோல் அடிக்க, சுவிஸ்சர்லாந்து அணி 2-1 என்ற கணக்கில் த்ரில் வெற்றி பெற்றது.

## ஆர்ஜென்ரீனாவிடம் அடங்கியது போஸ்னியா



(ரியோடிஜெனிரோ)

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் போஸ்னிய அணிக்கெதிரான போட்டியில் மெஸ்சியின் தாக்குதல் ஆட்டத்தின் மூலம் ஆர்ஜென்ரீன அணி அபார வெற்றிபெற்றது.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி பிரேசிலில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற எப் பிரிவுக்கான ஆட்டத்தில் ஆர்ஜென்ரீன அணியும் போஸ்னியா அணியும் மோதின.

ஆர்ஜென்ரீனா அணியில் நட்சத்திர வீரர் மெஸ்சி களமிறங்கியதால் அவரது ஆட்டத்தை காண 78738 இரசிகர்கள் ஆர்வத்துடன் வந்திருந்தனர். மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமாகிய இவ் ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் மெஸ்சி அடித்த பந்தை போஸ்னியா வீரர் எமிர் கிளோசினினா தலையால் தடுத்த போது தவறுதலாக கம்பத்தில் சென்றதால் அது சேம் சைட் கோலாக மாறியது. இதன் பின்னர் இரு அணியும் விறுவிறுப்பாக மோதிய போதும் முதல் பாதியில் இரு அணிகளாலும் மேலதிகமாக கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. பின்னர் பின்பாதியில் ஆட்டம் சூடுபிடிக்கத்தொடங்கியது. குறிப்பாக மெஸ்சியின் ஆட்டத்தில் அனல்பறந்தது. பம்பரமாக களத்தில் சுற்றிய அவர் 65ஆவது நிமிடத்தில் அணியின் இரண்டாவது கோலை அடித்தார். உலகக்கோப்பையில் மெஸ்சியின் இரண்டாவது கோல் இதுவாகும். இதற்கு முன்பு அவர் 2006இல் சேர்பியா அணிக்கு எதிராக கோல் அடித்திருந்தார். பின்னர் வெற்றிக்காக போராடிய போஸ்னியா அணியில் ஆட்டத்தின் 85ஆவது நிமிடத்தில் இபிசிவிச் ஆறுதல் கோல் அடித்தார். நிறைவில் ஆர்ஜென்ரீன அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக மெஸ்சி தெரிவு செய்யப்பட்டார்.



## வென்றது பிரான்ஸ்

(பிரேசிலியா)

ஹோண்டுரொஸ் அணிக்கெதிரான போட்டியில் பிரான்ஸ் அணி இலகுவாக வெற்றிபெற்றது.

20ஆவது உலக்க் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. பிரான்ஸ் ஹோண்டுரொஸ் அணிகளுக்கிடையிலான போட்டி இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 3.30 மணிக்கு நடைபெற்றது.

ஆரம்பம் முததே பிரான்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல்களையும் பெற்றுவந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் ஹோண்டுரொஸ் அணி செயற்பட்டபோதும் பிரான்ஸ் அணியின் பிற்கள வீரர்களை எல்லையைத் தாண்ட முடியவில்லை. இறுதியில் பிரான்ஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## பாசக்கார இங்கிலாந்துப் பயலுகள்

இத்தாலி-இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தை சுமார் 1.5 கோடி இரசிகர்கள் பிரிட்டனில் பார்த்துள்ளதாக பி.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. பிரிட்டன் நேரப்படி இரவு 11 மணிக்குத் ஆரம்பமாகிய இந்த ஆட்டத்தை பி.பி.சி. செய்தி நிறுவனம் ஒளிபரப்பியது. ஆட்டத்தின் பின்பகுதியில் இங்கிலாந்து பின்னடைவைச் சந்தித்தவுடன் பலர் தொலைக்காட்சியை நிறுத்தி விட்டனர். எனினும், ஆட்டம் முழுவதும் பார்த்தவர்கள் சராசரியாக 1.15 கோடி பேர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் ஒரு நிகழ்ச்சியை அதிகம்பேர் பார்த்து இரசித்துள்ளது இதுவே முதன் முறையாகும்.

## இன்றைய ஆட்டம்

Brasil 2014 FIFA WORLD CUP

**பிரேசில் எதிர் மெக்சிக்கோ**
**இலங்கை நள்ளிரவு 12.30**

**ரஷ்யா எதிர் தென்கொரியா**
**இலங்கை நேரம் நள்ளிரவு 12.30**

**அவுஸ்ரேலியா எதிர் நெதர்லாந்து**
**இலங்கை இரவு 9.30**

## கால்பந்துத் துளிகள்...

* சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் விளையாடும் வீரர்களில் தங்களின் அபிமான வீரர் யார் என இந்தியப் பெண் இரசிகர்களிடம் நடாத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பில், ஆர்ஜென்ரீனா அணி கப்டன் மெஸ்சி முதலிடம் பிடித்துள்ளார்.

* ஆரம்ப லீக் ஆட்டத்தில் 1–5 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்திடம் மண்ணைக் கவ்வினாலும், நடப்புச் சம்பியன் ஸ்பெயின் அணி இந்த படுதோல்வியில் இருந்து மீண்டு விலகல் சுற்றுக்கு முன்னேறும் என்று அந்த அணியின் செர்ஜியோ ரொமோஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

* கால்பந்து களத்தின் உள்ளே நிகழும் நிகழ்வுகளை, குறைந்த அலை வரிசை கொண்ட காந்தப் புலங்களில் முப்பரிமாணத்தில் படம் பிடித்து உடனுக்குடன் காட்சிகளை ஆய்வு செய்யும் வகையில் நவீன தொழில் நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக கோல் அடிக்கப்பட்டதா இல்லையா என்பதை நடுவர்கள் உறுதி செய்துகொள்ள முடியும்.

* இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இத்தாலியின் ஆண்ட்ரு பிர்லோ 108 முறை பந்தை பாஸ் செய்துள்ளார். இந்த உலகக் கோப்பையில் இது அதிகபட்சமாகும்.

* 1986ஆம் ஆண்டுக்குப் பின்னர், உலகக் கோப்பையின் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி தற்போதுதான் தோற்றுள்ளது.

* இத்தாலிக்கு ஏதிராக கடைசியாக விளையாடிய 11 ஆட்டங்களில் இங்கிலாந்து இரண்டில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது.

* உலகக் கோப்பையில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் கடைசியாக அடிக்கப்பட்ட 26 பெனால்டி ஷொட்களும் வலது காலால் அடிக்கப்பட்டவை. கடைசியாக, 2002ஆம் ஆண்டில் ரெகோபா என்பவர் இடதுகாலால் கோல் அடித்துள்ளார்.

## களத்திற்கு வெளியில்...

போஸ்னிய அணிக்கு எதிரான போட்டியில் நாங்கள் பெற்றுக்கொண்ட வெற்றி முக்கியமானது. சரியான இலக்கை நோக்கி நாங்கள் செல்கிறோம். இந்த வெற்றி மூலம் 3 புள்ளிகள் கிடைத்துள்ளது. ஆனாலும், இன்னும் நாங்கள் முன்னேற்றம் அடையவேண்டும் என்று நினைக்கிறோம். நாங்கள் 2–1 என்ற கணக்கில் வெற்றி பெற்றாலும், முதல் பாதி ஆட்டம் எங்களுக்கு ஏமாற்றம் அளித்தது. எல்லா நேரமும் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதை விட வெற்றி பெறவேண்டும் என்பதே முக்கியம். இரண்டாவது பாதியில் பந்து எங்கள் வசம் இருந்தது. அதனால் சிறப்பாக விளையாட முடிந்தது. இதோபோல் மற்ற போட்டிகளிலும் விளையாடுவோம்.

**மெஸ்சி (ஆர்ஜென்ரீனா கப்டன்)**

ஒரு அணி தோற்கிறது என்றால், வீழ்ச்சிக்கு தனிநபரின் செயற்பாடு மட்டுமே காரணமாக இருக்க முடியாது. ஒட்டுமொத்த அணியும் பலவீனமடைந்ததே தோல்விக்குக் காரணம். எனவே அணிக் கப்டன் கேசில்லாசை மட்டும் குறை சொல்லக்கூடாது. அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டு நடப்புச் சம்பியன் என்பதை நிரூபிப்போம்.

**வின்சென்ட் டெல் போஸ்கியூட் (ஸ்பெயின் பயிற்சியாளர்)**

ரூனி இடது பக்கம் சிறப்பாக விளையாடவில்லை என்று கூற முடியாது. அனைத்து இடங்களிலும் அவர் சிறப்பாக விளையாடக் கூடியவர். தனது ஆட்டத்திறன் மீது ரூனி திருப்தி அடைந்திருப்பார் என்று கருதுகிறேன். இந்த ஆட்டத்தின் கடைசி நேரத்தில் எங்களுக்கு கோல் கிடைக்காதது ஏமாற்றம். இருப்பினும், இளம் வீரர்களான ரஹீம் ஸ்டெர்லிங், டானியல் ஸ்டர்ரிட்ஜ், டேனி வெல்பேக் ஆகியோர் சிறப்பாக விளையாடினர். முதல் ஆட்டத்தில் தோற்ற போதும், தொடரை சிறப்பாக ஆரம்பித்துள்ளதாகவே நான் கருதுகிறேன். அடுத்த ஆட்டங்களில் அற்புதமானதொரு ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும்.

**ரொய் ஹொட்ஜ்சன் (இங்கிலாந்து பயிற்றுநர்)**

இங்கிலாந்து அணிக்கெதிரான ஆட்டத்தில் எங்களது தந்திரங்களுக்கு உரிய சன்மானம் கிடைத்தது த்ரில்லாக இருந்தது. இங்கிலாந்தைப் போல எங்களிடம் ஆற்றல் மிகுந்த வீரர்கள் இல்லை. 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இங்கிலாந்தின் ஆட்ட வியூகம் தற்போது இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை லாங் ரேஞ்ச் பாஸ், ஹெட்டர் ஆகியவற்றை ஆட்டத்தில் அந்த அணி வெளிப்படுத்தியது. ஆனால், தற்போது குறைவான தூரத்தில் பந்தை பாஸ் செய்வதில் கூட அவர்கள் சிறந்து விளங்குகின்றனர். உலகக் கோப்பையில் சிறந்த தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தும் இங்கிலாந்து அணியை நாங்கள் வீழ்த்தியதால் மிகவும் திருப்தி அடைந்துள்ளோம்.

**பிரண்டெலி (இத்தாலி பயிற்சியாளர்)**

# வடமாகாண பாடசாலை மட்ட கூடைப்பந்து பற்றிக்ஸ், திருக்குடும்ப கன்னியர் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பெண்கள் பாடசாலை அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

வடக்குமாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இதில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அணிகள் மோதிக் கொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடியதுடன் புள்ளிகளையும் மாறிமாறிப் பெற்றுவந்தது. இறுதி நேரத்தில் ஆக்ரோஷமாகச் செயற்பட்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி புள்ளிகளை மளமளவெனக் குவித்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் யாழ். இந்துக் கல்லூரி அணி செயற்பட்டபோதும் அது முடியவில்லை. இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 60-53 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பெண்கள் பாடசாலை அணியும் சுன்னாகம் இராமநாதன் பெண்கள் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பெண்கள் பாடசாலை அணி 68-64 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 32-29 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது. கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஆறு இடங்களையும் யாழ். மாவட்ட பாடசாலை அணிகள் கைப்பற்றிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12,93)

## இங்கிலாந்து முன்னிலை

இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முன்னிலைபெற்றுள்ளது. இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் லோட்ஸில் நடைபெற்று வருகின்றது. முதல் இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 453 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கக்கார, மத்தியூஸ் ஆகியோர் சதம் விளாசினர். 122 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சிற்காக ஆடிய இங்கிலாந்து அணி நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை எட்டு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பலான்சி ஆட்டமிழக்காது 104 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்து வீச்சில் ரங்கண ஹேரம் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இரண்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இங்கிலாந்து அணி 384 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 575.

## இன்றைய மோதல்

வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம், சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையம் இணைந்து நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி மகாத்மா விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது. இன்றைய தினம் வட்டுக்கோட்டை எதிர் ஆதவன் பி, கலைமகள் எதிர் றெட்றேஞ்சர்ஸ், காந்திஜி எதி ஆனைக்கோட்டை யூனியன் அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

## இன்று பெண்கள் கால்பந்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையிலான பெண். கால்பந்துப் போட்டி இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றவுள்ளது. கடந்த வாரம் வவுனியாவில் நடைபெறவிருந்த இப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டது. இந்நிலையில் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டியில் பங்குகொள்ள வெளிமாவட்ட அணிகள் நேற்று மாலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளதாகவும், அவர்களுக்கான தங்குமிடம், உணவு உட்பட சகல வசதிகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தாகவும் வடக்கு மாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்துள்ளார். (93)

## பளு தூக்கலில் யாழ். இந்து பதக்க வேட்டை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 12 தங்கம், ஏழு வெள்ளி, ஒன்பது வெண்கலப் பதக்கங்களை வென்று அசத்தியுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டி கடந்த வாரம் சென். ஜோண்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர்கள் சிறப்பான முறையில் செயற்பட்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியதுடன் 28 பதக்கங்களை அள்ளியுள்ளனர்.

17 வயது பிரிவினில் 20 பதக்கங்களையும், 19 வயது பிரிவினில் 8 பதக்கங்களையும் வென்றுள்ளனர். கடந்த வருடம் நடைபெற்ற மாகாணப் போட்டியிலும் 12 பதக்கங்களை யாழ். இந்துக் கல்லூரி அணி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

17 வயதுப் பிரிவில் அபிராம், து.திர்சாந், லகிர்தன், அஜித்ராம், கோபிநாத், விதுசன், சுயந்தன், பு.ஜெகஜீவன், எட்வின்யூட், சிவவிஷ்ணு, பபிலன், சு.பிரகலாதன், விதுன், இன்பராஜ், திசாந், சபிதன், சிவரூபன், சிறீசன், மைத்திரி சர்மா, ஜதீபன், 19 வயதுப் பிரிவில் பிரகலாதன், சரணியன், ஸ்ரீகௌதம், லக்ஷன், அபிசேக், வித்தியபிரகாஸ், சந்திரமௌளீசன், கிருசிகன் ஆகியோர் பதக்கங்களைவென்று அசத்தியுள்ளனர். (48)

## ஜே.பி.எல். ருவென்ரி-20 அரையிறுதியில் பற்றீசியன்ஸ், யூனியன்


ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பற்றீசியன்ஸ் மற்றும் தெல்லிப்பளை யூனியன் அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் இரு காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

முதலாவது காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ் கோப்பர்ஸ் அணியும், யாழ். பற்றீசியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிறாஸ் கோப்பர்ஸ் அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காந்தசீலன் 38, கனதீபன் 13, டிலோஷன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜீபன் 16 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைச் சாய்த்தார். மற்றும் நிதர்சன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 106 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி 19.3 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நோபேட் 18, பத்மமுரளி 13, நவதீபன், லிவிங்டன் ஆகியோர் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் மூன்று, ராஜகாந்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் பற்றீசியன்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. போட்டியின் ஆட்டநாயகனாக சுஜீபன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் அணியும் யாழ். சென்றல் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். சென்றல் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தெல்லிப்பளை யூனியன் அணி 19.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தயாளன் 34, ரகுபதி 16, சுயந்தன் 18, மகிழ்ராஜ், ஜன்ஷன் ஆகியோர் தலா 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரஜீவ்குமார் நான்கு, சுபதீஸ், றொகான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 158 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் செல்டன் 20, றொகான் 26, ரஜீவ்குமார் 20, பாலேந்திரா 24 ஓட்டங்களைப் பெற்றனர். இவ்வெற்றியின் மூலம் யூனியன் அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.








## ஒட்டுசுட்டான் பிரதேச மட்ட கரப்பந்து குழாமுறிப்பு, ஈஸ்வரன் சம்பியன்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையில் கரப்பந்தாட்டப் போட்டியில் குழாமுறிப்பு மற்றும் சமளங்குளம் ஈஸ்வரன் அணிகள் வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றிக் கொண்டன.

ஒட்டுசுட்டானில் உள்ள் 64ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரி விற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த 14ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் முத்தையன்கட்டு பாரதி அணியும் குழாமுறிப்பு அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய குழாமுறிப்பு அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சமளங்குளம் ஈஸ்வரன் அணியும் மன்னாகண்டல் வளர்மதி அணியும் மோதின. ஐந்து செட் களைக் கொண்ட இப்போட்டியில் சமளங்குளம் ஈஸ் வரன் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

64ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சத்தியப்பிரியலியனகே தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் 641ஆவது படைப் பிரிவின் பொறுப்பதிகாரி, 643ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி, ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ. குருபரன், வலயக்கல்வி பணிப்பாளர் வே.மாளினி, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். வெற்றிக் கிண்ணங்களை 64ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சத்தியப் பிரியலியனகே வழங்கிக் கௌரவித்தார். (40)

# சமூகத்திற்கு பெரும் சவாலாக அமையும் மனித உரிமைகள் மீறல்கள்...

A.தேனகா
மெய்யியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்




மனிதன் உயிர் வாழ்வதற்கும் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும் அடிப்படையானதாக அமையும் சுதந்திரம் - உரிமை எனப்படும். இந்த உரிமைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது மனித உரிமை.

கிரேக்க மெய்யியலாளர்கள் மனித உரிமை குறித்து குறிப்பிடும் போது சோக்கிரட்டீஸ் Know thy self என்பதனூடாகவும், பிளேட்டோ அறிவாராய்ச்சி ஒழுக்கவியல் ஊடாக தனிநபர், சமூகம், அரசாங்கத்தின் கடமை என்றும், அரிஸ்ரோட்டில் ஒரு நாட்டின் பிரதான கடமை, சொத்து, பொது நிகழ்வு என்பவற்றில் அரச பங்களிப்பு குறித்து குறிப்பிடும்போது மனித உரிமையினை வலியுறுத்துவதனையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆயினும் 18ஆம் நூற்றாண்டில் தான் மனித உரிமையின் விருத்தியினைக் காண முடியும். மனித உரிமையின் rights of man & citizen என்ற கோட்பாடானது சர்வாதிகார ஆட்சிக்கு சவாலாக அமைந்தது எனலாம். ஆரம்ப காலத்தில் உரிமைக்கு முதன்மை கொடுக்கவில்லை. ஆனால் இன்று சுதந்திரம் சமத்துவம் என்பன மனித உரிமையின் அடிப்படையாகின்றது.

மனித உரிமை என்ற சொற் பதமானது இரண்டாம் உலகப் போரின் பின்பு பேச்சு வழக்கில் தோன்றி 1945இல் ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்துடன் 1948 இல் அனைத்துலக மனித பிரகடனம் செய்த பின்னரே. இது பிரபல்யம் அடைந்தது. ஆரம்பத்தில் தனிமனித கருத்தினை வெளிப்படுத்தும் உரிமை இருக்கவில்லை ஆனால் மறுமலர்ச்சி காலத்தில் ஐரோப்பிய கண்டத்தில் -

- அக்குவானஸின் summa theyalogiga எனும் நூல்
- இங்கிலாந்து மன்னனின் மக்னாகாட்டா சிந்தனை
- பிரான்சில் வெளியிடப்பட்ட மனித பிரஜைகளின் உரிமை
- கொப்ஸ்சின் பொருள் முதல் வாதம்
- லொக்கின் அனுபவ முதல் வாதம் போன்றன.

மனிதனின் பகுத்தறிவு சிந்தனையில் நம்பிக்கையை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, மனித உரிமை செயற்பாடுகளை பூரண நிலைக்கு கொண்டு வருதல் அவசியமாயிற்று.

சமயங்கள் மனித உரிமை குறித்து குறிப்பிடும் போது -

- இந்து சமயம் அன்பே சிவம் என்பதில் அன்பையும் கருணையையும்
- நக்கீரர் நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்றும்
- கிறீஸ்தவ சமயம் உயிரினங்களுக்கு அன்பு காட்டுதல், அயலவனை நேசி, பாவமன்னிப்பு போன்றவற்றையும்
- பௌத்த சமயம் திரிபீடகம் எனும் நூலின் மூலம் கொல்லாமை, அகிம்சை, சகோதரப்பண்பு போன்றவற்றையும்
- இஸ்லாம் புனித குர்ஆன் மூலம் அமைதியைப் பேணல் எனவும்
- சீக்கியம் குருநானக் என்பவரின் போதனை மூலமும் மனித உரிமை குறித்த கருத்தினை வெளிப்படுத்தியுள்ளன.

இவ்வாறான சிறப்பு மிக்க மனித உரிமையின் பண்புகளாக -

- உரிமைகள் பொதுவானதாக இருக்க வேண்டும்
- சமத்துவமும் பாரபட்சமும் பார்க்காத நிலை
- குறித்த எல்லைக்கு உட்பட்டிருத்தல்
- பறித்தெடுக்க முடியாதவை
- சார்புத்தன்மை கொண்டவை
- உரிமைகளும் கடப்பாடுகளும் சேர்ந்தது

இன்று மனித உரிமையானது 5 வகையாக காணப்படுகின்றது.

**அவையாவன -**

**சிவில் உரிமை** Civil rights
**அரவியல் உரிமை** political rights
**பொருளாதார உரிமை** Economic rights
**சமூக உரிமை** social rights
**கலாசார உரிமை** cultural rights

இவ்வாறான வளர்ச்சிப் போக்கினையும் சிறந்த பண்புகளையும் கொண்டு காணப்படும் மனித உரிமையானது இலங்கையில் 1996 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று மனித உரிமையானது எந்தளவுக்கு செல்வாக்கு பெற்று இருக்கென்பது கேள்விக்குறி ஆகும். மனிதனுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு தோற்றம் பெற்ற மனித உரிமை இன்று அழிவிற்கு வழிகோலும் ஒன்றாக அமைந்து வருகின்றது.

இன்று பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் எங்கு பார்த்தாலும் சிறுவர், பெண்கள் மீதான மனித உரிமை மீறல்கள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இன்று எமது சமுதாயத்தில் காணப்படும் மனித உரிமை மீறல்களாக - அடிமைத்தனம், இனப்படுகொலை, சாதிப்பாகுபாடு, தீவிரவாதம், பகிடிவதை, சட்டத்திற்கு புறம்பான கொலை போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு காணப்படும் மனித உரிமை மீறல்களை நாம் முன்னெடுத்துச் செல்ல பல வழிகள் உண்டு -

♦ பத்திரிகையில் வாசித்து சமூகத்திற்கு பரப்புதல்.

♦ கல்வி பயிலும் இடங்களிலும் அல்லது வேறு இடங்களிலும் விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ளல்.

கல்வி அறிவு பெற்றோருடன் அல்லது மனித உரிமை தெரிந்தோருடன் இது குறித்து உரையாடல்.

♦ உள்ளூர் பத்திரிகைகளில் இது குறித்த கருத்துக்களை வெளியிடல்.

♦ மனித உரிமை தொடர்பான அமைப்பொன்றுடன் இணைதல்.

இவ்வாறு மனித உரிமை மீறலை தடுக்க நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் எமது மக்கள் சுதந்திரமாக விடுதலையுடனும் வாழ வழிவகுக்கும்.

# கடற்கரையில் ஒரு ‘த்ரில்’ அனுபவம்!

காற்று வாங்க, தண்ணீரில் நிற்க, அலைகளுக்கு நடுவே புகுந்து விளையாட, நீச்சலடிக்க.... இவற்றுக்குத் தானே நாம் கடற்கரைக்கு செல்வோம். ஆனால், நெதர்லாந்து நாட்டு கடற்பகுதியில் உள்ள கரிபியன் தீவுகளில் ஒன்றான செயின்ற் மார்ட்டின் என்ற கடற்கரையை ஒட்டிய பகுதிவாழ் மக்கள், தாழ்வாக பறக்கும் விமானத்தின் கீழ் நிற்கவே விரும்புகின்றனர்.

செயின்ற் மார்ட்டின் தீவை ஒட்டி, ஜூலியானா சர்வதேச விமான நிலையம் உள்ளது. விமானத்தின் ஓடுபாதை, 2,300 மீற்றர் நீளமுள்ளது. விமான நிலையத்தில் விமானம் இறங்கும்போதும், மேலே எழும் போதும், அவை இக்கடற்கரையை மிகக்குறைந்த உயரத்தில், கடந்து செல்லும்.

விமானம் செல்வதால் எழும் காற்று, கடற்கரையில் உள்ள மக்களில் சிலரை நிலை குலையச் செய்துவிடும்; சத்தம், காதுகளை செவிடாக்கும். ஆனால், இங்கு வரும் மக்கள், அதைப் பற்றி கவலைப்படுவதில்லை. “விமானக் காற்று எப்படி நம்மை தூக்கி எறிகிறது பார்ப்போம்...“ என்று, அங்கேயே நிற்பர்.

இங்குள்ள ஹோட்டல்களில், விமானங்கள் வந்து செல்லும் நேரங்களை எழுதி வைக்கின்றனர். இந்த அறிவிப்பைப் பார்த்து, விமானம் வந்து செல்லும் நேரத்துக்கு சரியாக கடற்கரையில் கூடி விடுவர் மக்கள்.

விமான நிலையத்தில் விமானம் நிற்கும்போது, எப்படி அதன் முழு நீளத்தையும், கம்பீரத்தையும் ரசிக்க முடியுமோ, அதேபோல், கடற்கரையில் நின்றும் முழுமையாக ரசிக்கலாம்.

விமான நிலைய எல்லை வேலி, கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளதால், விமானம் கிளம்பும் போது எழும் காற்று. அங்கு நிற்பவர்களை கடலில் தூக்கி எறிந்து விடும் அபாயம் உள்ளது. இதனால், உடலில் காயமும், சில சமயம் மரணம் கூட நேரலாம் என, எச்சரிக்கை அறிவிப்பும் வைத்துள்ளனர்.

இந்த அறிவிப்பு பற்றியெல்லாம் கவலைப்படாமல், பலர் வேலி அருகிலேயே துணிந்து நிற்பர். இதனால் விமான நிலையத்தினர் தற்போது, மேலும் ஒரு வேலியை அமைத்துள்ளனர்.

இருந்தாலும், கிளம்பும் விமானத்தின் காற்றின் சீற்றத்தை எதிர்கொள்ள, மக்கள் தொடர்ந்து வருகின்றனர்.



# ஜோஜியும் பூனையும்!

[ஜப்பான் நாட்டுப்புறக் கதை]

ஜப்பான் நாட்டிலிருந்த அந்தச் சின்ன ஊரில் ஒரு பண்ணையார் குடும்பம். அந்தப் பண்ணையாருக்கு நான்கு மகன்கள் நான்கு மகள்கள். அந்த எட்டுக் குழந்தைகளில் ஒருவன் பெயர் ஜோஜி.

ஜோஜி நன்றாக படங்கள் வரைவான். அவன் பூனைப் படத்தை மட்டும்தான் வரைவான். பூனையைத் தவிர்த்து வேறு எந்தப் படத்தையும் அவன் வரைய மாட்டான். வேறு எந்த வேலையும் செய்ய மாட்டான்.

பூனையைப் பலவிதமாக வரைவான். சிறிய பூனைகள், பெரிய பூனைகள், ஒல்லியான பூனைகள், குண்டான பூனைகள், மீசை வைத்த பூனை என்று பூனையை அவன் விருப்பப்படியெல்லாம் வரைவான்.

அவனுடைய அப்பா ஒரு நாள் ஜோஜியைக் கூப்பிட்டு, "உடனே நீ பூனை படம் வரைவதை நிறுத்து. நீ பூனை பூனையாக வரைந்து கொண்டிருந்தால் நீ என்றைக்கு ஒரு விவசாயியாவது?" என்று சத்தம் போட்டார்.

"அப்பா, நான் வரைவதை நிறுத்த முயற்சி செய்கிறேன்," என்றான், ஜோஜி.

ஜோஜியும் முயற்சி பண்ணினான். இனிமேல் பூனையை வரையக்கூடாது என்று சொல்லிக் கொள்வான். பண்ணையில் எங்காவது ஒரு பூனையைப் பார்த்து விட்டால் போதும்! அவ்வளவுதான், அவன் உறுதி தளர்ந்துவிடும். உடனே அந்தப் பூனையை வரைய உட்கார்ந்து விடுவான்.

விவசாயி தன் மகனை அருகிலுள்ள கிராமக் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள தலைமை அர்ச்சகரிடம் தன் மகனைக் காண்பித்து பிரச்சினையைச் சொன்னார். அவரும் என்னிடம் விடுங்கள்; அவனைப் படிக்க வைத்து அர்ச்சகராக்கி விடுகிறேன் என்றார்.

ஜோஜி மற்ற மாணவர்களுடன் தங்கி அர்ச்சகர் கொடுக்கும் பாடங்களைப் படிக்க ஆரம்பித்தான். அர்ச்சகர் எழுதுவதற்குத் தேவையான மை, தூரிகை, சிலேட் போன்றவற்றையும் ஜோஜிக்குக் கொடுத்திருந்தார்.

மற்ற மாணவர்கள் பாடங்களை கண்ணும் கருத்துமாக எழுதித் தயாரித்தனர். ஆனால் ஜோஜியோ அவனுக்கு எழுதக் கொடுத்திருந்த தாள்களில் வரையத் துவங்கினான். அவன் வரைந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.

அது பூனை!

சிறிய பூனைகள், பெரிய பூனைகள், ஒல்லியான பூனைகள், குண்டான பூனைகள், மீசை வைத்த பூனை என்று வரைந்தான்.

"நீ பூனைகள் வரைவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இப்படியே பூனைகள் மட்டுமே வரைந்துகொண்டிருந்தால் நீ எப்படி அர்ச்சகராவது?" என்று கோவில் தலைமை அர்ச்சகர் கேட்டார்.

"அய்யா, என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் பூனை படம் வரைவதை நிறுத்த முயல்கிறேன்," என்று அமைதியாகப் பதில் சொன்னான் ஜோஜி.

அவனும் முயற்சி செய்தான். ஆனால், கோவில் பூனையை குறுக்கே செல்லும் போது பார்த்ததால், அவன் படிக்க வேண்டியதையும் எழுத வேண்டியதையும் மறந்து விடுகிறான். அடுத்து ஒரு பூனையை வரைய ஆரம்பித்து விடுகிறான்.

கோவில் சுவர், திரைச் சீலை, காகிதத்தாள் என்று எல்லாவற்றிலும் பூனைகளாக வரைந்து தள்ளினான். கோவில் முழுக்க பூனை படங்களாக இருந்தன.

பக்தர்கள் தலைமை அர்ச்சகரிடம் புகார் செய்தனர்.




"ஜோஜி நீ ஒரு போதும் அர்ச்சகராகப் போவது இல்லை," என்று மிகுந்த வருத்தத்தோடு சொன்னார். அதுமட்டுமல்ல உன்னுடைய பொருட்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு உன் வீட்டுக்கே போய்விடு என்றும் சொல்லி விட்டார்.

ஜோஜி தன் அறைக்குச் சென்று அவனுடைய பொருட்களை எல்லாம் எடுத்து வைக்கத் தொடங்கினான். வீட்டுக்குப் போவதற்குப் பயமாக இருந்தது. அவனுடைய அப்பா கோபத்தில் என்ன செய்வார் என்று தெரியாது. அதனால் வேறெங்காவது போய் தங்க முடியுமா என்று பார்ப்போம் என முடிவு செய்து கொண்டான்.

ஜோஜி நடக்கத் தொடங்கினான். இருட்டிக் கொண்டு வந்தது. வேகவேகமாக அந்தக் கிராமத்தை நோக்கி நடந்தான். ஒரு கோவிலுக்கு வந்து சேர்ந்தான். கோவில் கதவைத் தட்டினான்.

ஒருத்தரும் வந்து கதவைத் திறக்கவில்லை. பெரிய கதவை மிகுந்த சிரமப்பட்டு கதவைத் தள்ளித் திறந்து உள்ளே போனான். கோவிலுக்குள் எங்கும் ஒரே இருட்டு. ஜோஜிக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் கோவிலுக்குள் விளக்கு இல்லை; ஆட்களும் இல்லை. என்னாச்சு இந்தக் கோவிலுக்கு என்று தனக்குள்- கேட்டுக் கொண்டான்.

கதவுக்கு அருகே இருந்த விளக்கு ஒன்றை எரியவிட்டான். அப்போதுதான் பார்த்தான். அதையெல்லாம் பார்த்தபோது அவனுக்குள் மகிழ்ச்சி ஏற்பட்டது. மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரமாகச் சத்தம்போடவேண்டும் என்று நினைத்தான்.

அந்தப் பெரிய அறையில் திரைச்சீலைகள், பெரிய பெரிய வரைபடத் தாள்கள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. அதுதான் அவன் மகிழ்ச்சிக்குக் காரணம். உடனடியாகத் தன்னுடைய பையிலிருந்து மை, தூரிகை எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டான். தன்னுடைய வரையும் படலத்தைத் துவங்கி விட்டான்.

வழக்கம்போல ஒன்றை மட்டுமே வரைந்தான்... வெவ்வேறு வடிவங்களில்! அது பூனை!

இந்தத் தடவை அவன் ஒன்றைக் கடைசியாக வரைந்தான். அந்த அறையின் நீள அகலத்துக்கு இருந்த திரைச் சீலையின் அளவுக்கு பெரிதாக ஒரு இராட்சதப் பூனையை சிரமப்பட்டு வரைந்தான். அந்தப் பிரம்மாண்டமான பூனை மிகத் தத்ரூபமாக அழகாகவும் வந்திருந்தது. அவன் இதுவரை அவ்வளவு பெரிய பூனையை வரைந்ததே இல்லை.

அவனுக்கு மிகவும் களைப்பாக இருந்தது. தூங்குவதற்கு ஏதாவது சின்ன அறை இருக்குமா என்று அங்குமிங்கும் நடந்து போய் பார்த்தான். சிறு மாடம் போல ஒரு அறை தெரிந்தது. உள்பக்கம் நுழைந்து படுத்துக் கொண்டு கதவை இழுத்து மூடித் தூங்க ஆரம்பித்தான்.

திடீர் என பின்னிரவில் ஒரு உறுமல் சத்தம் கேட்டு விழித்தான்.

கொஞ்சம் பயந்தும் போனான். அந்தச் சத்தம் அவன் படம் வரைந்த அறையில் கேட்டது. சத்தத்தை வைத்துப் பார்க்கும் போது இது ஒரு பெரிய மிருகமாகத்தான் இருக்கவேண்டும், என்று நினைத்தான்.

இது போன்ற பிராணிக்குப் பயந்துதான், அர்ச்சகரோ, பக்தர்களோ இரவில் இங்கு தங்குவது இல்லை போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். இப்படி ஒரு இடத்தில் நாம் தெரியாமல் மாட்டிக்கொண்டோமே என்று பயந்தான்.

இப்போது இவன் படுத்திருக்கும் இடத்துக்கு நேர் கீழே அந்தப் பிராணியின் உறுமல் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் அந்தப் பிராணிக்கும் இன்னொரு பிராணிக்கும் நடக்கும் சண்டை போல கேட்டது. இரண்டு விலங்குகள் ஒன்றோடு ஒன்று கட்டிப்புரளுவது போலிருந்தது.

திடீர் என ஒரு பெருத்த ஒலி; அதனைத் தொடர்ந்து பாதத்தை தரையில் தட்டினால் ஒரு மெல்லிய "தட்.. தட்" சத்தம் கேட்குமே, அப்படிக் கேட்டது. அதுவும் கொஞ்ச நேரத்தில் நின்று போனது. எந்த சத்தமும் இல்லை.

ஜோஜிக்கு உள்ளூர நடுக்கம். அந்த மிருகம் தான் கீழே இறங்கி வரக் காத்திருக்கோ, என்ற பயம். கதவைத் திறந்து பார்க்கவும் பயம், என்னவாக இருக்கும்? அவனால் இந்தப் பிராணியாகத்தானிருக்கும் என்ற உறுதியான முடிவுக்கு வரமுடியவில்லை.

தூங்காமல் கொட்ட கொட்ட விழித்திருந்தான் ஜோஜி.

விடிந்தது. எப்படியாவது இறங்கித்தானே ஆகவேண்டும் என்று கீழே இறங்க முடிவு செய்தான்.

மெல்லக் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கியதும், திடுக்கிட வைத்தது அவன் கண்ட காட்சி.

பிரம்மாண்டமான எலி செத்துக் கிடந்தது. அந்த எலி "பசு" மாடு போல பெரியதாக இருந்தது. இந்த எலி எந்த மிருகத்துடன் சண்டை போட்டு மடிந்தது? சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கே எந்த மிருகமும் அவன் கண்ணில் தென்படவில்லை. அறையில் இருந்ததெல்லாம் நீண்டு தொங்கிய திரைச்சீலைகள் அதில் அவன் வரைந்த சின்னதும் பெரியதுமான பூனைகள் படங்கள்தான்.

அவன் வரைந்த பெரிய பூனைப் படத்தை மீண்டும் பார்த்தான் அந்தப் படம்....! இடம் மாறியிருந்தது.

இது எப்படி நடந்தது?

"பூனை" ஜோஜி ஒரு முறை அழுத்தம் திருத்தமாகச் சொன்னவன், என்ன நடந்தது என்பது புரிந்துவிட்டது. அவன் கண்கள் வியப்பால் விரிந்தது.

நீதான் இந்த எலியிடமிருந்து என்னைக் காப்பாற்றினாயா? கீழே இறங்கி காரியத்தை முடித்துவிட்டு மீண்டும் மேலே ஏறிக்கொண்டாயா?" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

அந்தப் பெரிய பூனையின் பாதங்களை கைகளால் தடவி, "என்னைக் காப்பாற்றியதற்கு ரெம்ப நன்றி என் மதிப்பிற்குரிய பூனையாரே" என்றான் ஜோஜி.

இனிமேல் என் உயிர் உள்ளவரை "பூனை" படம் வரைவதை யாரும் தடுக்க முடியாது என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அப்போது கோவில் அர்ச்சகர் மற்றும் ஊர் பொதுமக்களில் சிலர் அங்கு வந்தனர்.

அந்தக் கிராமத்துக்கே சவாலாக இருந்த எலி இறந்து கிடப்பதையும் அருகில் ஜோஜி நிற்பதையும் பார்த்தனர். நடந்ததை ஜோஜி அவர்களுக்கு விளக்கினான்.

ஜோஜி அந்தக் கிராமத்துக் கதாநாயகனாக ஆனான். அந்தக் கோவில் அர்ச்சகர் ஜோஜியை அவன் விரும்பும் காலம் வரைக்கும் அங்கு வசிக்கலாம் என்று சொன்னார்.

ஆனால் ஜோஜி அவன் அப்பா விரும்பியபடி ஒரு அர்ச்சகராகவும் ஆகவில்லை; ஒரு விவசாயியாகவும் ஆகவில்லை.

அவன் ஒரு ஓவியக் கலைஞனான்! மிகச் சிறந்த ஓவியன்! அனைத்து நாடுகளும் அவனைச் சிறப்பித்தன!

ஆனால், அவன் வரையும் ஓவியம் பூனை மட்டுமே!

சிறிய பூனைகள், பெரிய பூனைகள், ஒல்லியான பூனைகள், குண்டான பூனைகள், மீசை வைத்த பூனை என்று பூனை பல வடிவங்களில் ஓவியங்களாய்த் தொடர்ந்து கொண்டிருந்தது.

## புதுக்கரடி!

டாக்டர் லூகி அமெண்டோல் என்ற அறிவியல் அறிஞர் மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்பதைவிடக் கரடியிலிருந்து வந்தவன் என்று கூறச் சான்றுகள் பல துணை செய்வதாக ரோமில் கூறியுள்ளார்.

குரங்கினிடம் காணப்படாத ஆனால் கரடியிடம் காணப்படும் கீழ்க்காணும் மனித அனுபவங்களே அதற்கு அவர் காட்டும் காரணங்கள்.

கரடிகள் வேட்டை ஆடும்போது, மனிதனைப் போலவே தங்களுக்குள் வேலைகளைப் பங்கீடு செய்து கொள்கின்றன.

காதல் செய்யும்போது குட்டிகளைத் தூர அனுப்பிவிடுவது கரடிகளின் பழக்கம்.

கரடிகள் அமைதியாக இருந்து ஆழ்ந்து சிந்திக்கும் பழக்கம் உடையன.

குரங்குகள் மரத்தில் வாழ்ந்து பெரும்பாலும் மரக்கறி உணவு உண்பவை. ஆதிமனிதன் கரடிகளைப்போல் குகைகளில் விரும்பி வாழ்ந்திருக்கிறான்.






1959ஆம் ஆண்டு, சேகுவேரா இந்தியாவுக்கு விஜயம் செய்த பொழுது எடுத்த கிடைத்தற்கரிய புகைப்படம். டெல்லிக்கு அருகில் உள்ள கிராமத்திற்குச் சென்ற சேகுவேராவை, ஒரு கிராமத்து முதியவர் மாலை அணிவித்து வரவேற்கிறார்.




# வேகமும் விவேகமும்



மெதுவாகச் சென்று கொண்டிருந்த ஆமையைப் பார்த்த பூனை மியாவ் மியாவ் என்று கேலி செய்த தொனியில் கத்தியது. பூனையின் கிண்டலைப் புரிந்த ஆமை இப்போது எதற்காக என்னருகில் வந்து கத்துறாய் என்றது. உன் நிலையினைப் பார்க்க பரிதாபமாக உள்ளது என்றதும் ஏன் என்று ஆமை கேட்டது. உன்னிடம் கொஞ்சம்கூட வேகம் இல்லை. தினமும் ஒரு வேலையைச் செய்து முடித்தாலே பெரிய சாதனை அல்லவா, அதனால்தான் சொன்னேன் என்றது பூனை.என்னிடம் விவேகம் நிறைய உள்ளது. வேகத்தைவிட விவேகமே ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய ஒன்று.

விவேகத்தின் பலன் எப்போதும் வெற்றியைத் தருவதாக இருக்கும் என்றது ஆமை.ஆமையின் கூற்றைக் கேட்ட பூனை, நீ சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. வேகமே எப்போதும் வெற்றிதரக் கூடியது. சோதனை செய்து பார்ப்போமா என்றது.


வேகத்தைக் கண்களால்தான் பார்க்க முடியும். விவேகத்தைச் செயலால்தான் அறிய முடியும். உன் விருப்பப்படி சோதித்தே அறிந்து கொள்வோம். சோதனை எனனவென்று சொல் என்றது ஆமை. அங்கே தெரியும் பூச்செடியின் கீழே உதிர்ந்து கிடக்கும் மலர்களை யார் முதலில் எடுக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவராவார் என்றது. சரி என்று ஆமை சொல்லிய அடுத்த விநாடி, வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல பூச்செடியைப் பார்த்தபடியே பூனை ஓடியது.அருகில் வந்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் பூனை சென்ற போது, வீட்டிற்குள்ளிருந்து செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதற்காக தண்ணீர் பீய்ச்சும் குழாயினை எடுத்துக் கொண்டு பெரியவர் ஒருவர் வெளியில் வந்தார். செடியினை நோக்கிப் பாய்ந்து ஓடிவரும் பூனையைப் பார்த்து ஆத்திரத்துடன் கீழே கிடந்த கம்பினை எடுத்து விரட்டினார்.

ஓடிச் சென்ற வேகத்தில் திரும்பிய பூனை செய்வதறியாது திகைத்து, பின்னால் வந்து கொண்டிருந்த ஆமையைப் பார்த்துவிட்டு, பூச்செடியினை ஏக்கத்துடன் பார்த்தது. பூனை திரும்பிப் பார்த்ததைப் பார்த்த பெரியவர் மீண்டும் விரட்டினார்.உன் வேகம் இவ்வளவுதானா? என் விவேகத்தைப் பார் என்று மனதினுள் நினைத்துக் கொண்டே பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த பெரியவரையும் பூனையையும், வேறு யாரேனும் வீட்டினுள் இருந்து வருகிறார்களா என்றும் நோட்டம் விட்டபடியே தன்னால் முடிந்தவரை மனவலிமையை வரவழைத்து பெரியவர் கண்ணில் படாதபடி ஆமை ஓரமாக வந்து கொண்டிருந்தது.

பூச்செடிக்கு அருகில் ஆமை மறைந்து மறைந்து வந்தபோது பெரியவர் தண்ணீர் ஊற்றிவிட்டு வீட்டிற்குள் சென்றார். கீழே உதிர்ந்து கிடந்த பூக்களைத் தழுவியபடி தூரத்தில் நின்ற பூனையைப் பார்த்தது ஆமை. தன் வேகத்தினால் அறியாமையினால் ஏற்பட்ட தோல்வியினை நினைத்த பூனை, வெட்கப்பட்டுத் தலைகுனிந்து வந்தது. வேகமாகச் சென்று நீ தோல்வியடைந்தாய். மெதுவாகச் சென்றாலும் நான் வெற்றி பெற்றேன்.

ஒரு செயலைச் செய்யும்போது தடைகள் ஏற்படுவது இயல்பு. தடைகளை விவேகத்தினால் வெல்ல வேண்டும். வேகமும் விவேகமும் வெற்றி பெறத் தேவை என்றாலும் விவேகமே முக்கியத்துவம் வாய்ந்தது என்ற ஆமையின் பேச்சை பூனை ஒத்துக்கொண்டது.

# ஒட்டகச்சிவிங்கி வரிக்குதிரை ஒகாபி (Okapi)



ஒகாபி என்பது ஒட்டகச் சிவிங்கி வகையினைச் சேர்ந்த பாலூட்டி விலங்காகும். மத்திய ஆபிரிக்காவில் உள்ள காங்கோ நாட்டின் வடகிழக்கே உள்ள இட்ரு மழைக்காடுகளே ஒகாபியின் பூர்வீகமாகும். அனிமலியா (Animalia) பிரிவினுள் கிராபிடே (Giraffidae) குடும்பத்தைச் சேர்ந்தது.

ஒகாபியின் முன்னங்கால்களிலும் பின்னங்கால்களிலும் வரிக்குதிரையைப் போன்ற வெள்ளைக் கோடுகள் காணப்படுகின்றன.

இந்தக் கோடுகள் அடர்ந்த காடுகளில் குட்டிகள் தங்கள் தாய்களுடன் செல்லும்போது அடையாளம் கண்டுகொள்வதற்கு உதவலாம் என்று கருதப்படுகிறது.உடல் பசுமாட்டைப் போன்றும், தலை அமைப்பு மான் போன்றும், வாய் அமைப்பு ஒட்டகச்சிவிங்கியைப் போன்றும் உள்ளது. இதன் கால் குளம்புகள் குதிரையைப்போல் அமைந்துள்ளன.

வளைந்து கொடுக்கும் தன்மையுடன் அமைந்த நீண்ட நாக்கு 35 செ.மீ. நீளம் வரை சென்று மரங்களில் உள்ள. இலைகள் மற்றும் மொட்டுகளைப் பறிக்க உதவுகிறது. மேலும், தனது நீண்ட நாக்கினால் கண் இமைகள் மற்றும் காதுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் சுத்தம் செய்து கொள்ளும். நாக்கால் கண்களைச் சுத்தம் செய்யும் ஒரே பாலூட்டி இனம் ஒகாபி ஆகும்.ஆண் ஒகாபிகளுக்கு தோலினால் மூடப்பட்ட குறுகிய கொம்புகள் உண்டு. இந்தக் கொம்புகள் Ossicones என்று அழைக்கப்படுகின்றன. பெரிய காதுகள் இவற்றை வேட்டையாட வரும் சிறுத்தை போன்ற விலங்கின் சிறு ஒலியினைக் கேட்கும் நுண்திறன் கொண்டு உதவுகின்றன.

தலையிலிருந்து வால்வரை 1.9 இலிருந்து 2.5 மீற்றர் (6.2 - 8.2 அடி) நீளம் வரையும், நிற்கும்போது தோள்பட்டையிலிருந்து 1.5 முதல் 2 மீற்றர் (4.9 - 6.6 அடி) உயரம் வரை இருக்கும். 30 இலிருந்து 42 செ.மீ. நீளமுள்ள வால் உள்ளது. இதன் எடை 200 இலிருந்து 350 கிலோ வரை இருக்கும்.




தாவரவுண்ணி வகையினைச் சேர்ந்த ஒகாபி மரத்தின் இலைகள், மொட்டு கள், புல், தாவரங்கள், பழங்கள் மற்றும் பூஞ்சை உணவு வகை களை உட்கொள் கின்றது.



ஒகாபி சாப்பிடும் தாவர இனங்களுள் பல மனிதர்களுககு நஞ்சாக உள்ளன. 20 ஆம் நூற்றாண்டு வரை ஒகாபியை மேற்கத்திய நாடுகள் அறிந்திருக்கவில்லை என்றாலும் எத்தியோப்பியர் களின் கொடையாக இது சித்தரிக்கப்படுகிறது. வெளிப்படாத விலங்குகளின் சின்னமாக பன்னாட்டு சமூகம் ஒகாபியை ஏற்றுக்கொண்டுள்ளது.

# உலகின் மிகப் பெரிய சுரங்கம்



அமெரிக்காவின் உடா (Utah) மாகாணத்தில் சால்ட் லேக் நகரத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கென்னகாட் தாமிரச் சுரங்கமே (Kennecott Copper Mine) உலகின் மிகப் பெரிய சுரங்கமாகும். இங்கு தாமிரம் அதிக அளவில் கிடைக்கிறது. இதற்கு பிங்காம் கேன்யன் சுரங்கம் (Bingham Canyon Mine) என்ற இன்னொரு பெயரும் உண்டு. இது பிரிட்டனைச் சேர்ந்த ரியோ டின்டோ (Rio Tinto Groul) என்ற சர்வதேச நிறுவனத்திற்குச் சொந்தமானது.

1906 ஆம் ஆண்டு முதல் இந்தச் சுரங்கத்தில் உற்பத்தி நடைபெற்று வருகிறது. 0.97 கிலோ மீற்றர் ஆழத்துடனும் 4 கி.மீ. அகலத்துடனும் 1900 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. 1966 ஆம் ஆண்டிலிருந்து தேசிய வரலாற்றுச் சின்னமாக்கப்பட்டு, பிங்காம் கேன்யான் ஓபன் பிட் காப்பர் மைன் (Bingham Canyon Open Pit Copper Mine) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 2013 ஏப்ரலில் பெரிய அளவிலும் செப்ரெம்பரில் சிறிய அளவிலும் இங்கு நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

1848 ஆம் ஆண்டு முதன்முதலில் பிங்காம் பள்ளத்தாக்கில் தாமிரம் இருப்பது சான்.்.போர்டு பிங்காம், தாமஸ் பிங்காம் என்ற இரு சகோதரர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சுரங்கத்தில் 2004 ஆம் ஆண்டு வரை 17 மில்லியன் டன் தாமிரமும் 23 மில்லியன் அவுன்சஸ் தங்கமும் 190 மில்லியன் அவுன்சஸ் வெள்ளியும் 850 மில்லியன் பவுண்டுகள் மோலிப்டீனியமும் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை இங்கு வெட்டி எடுக்கப்பட்டுள்ள கனிம வளங்களின் மதிப்பானது கம்ஸ்டோக் லோட் (Comstock Lode), க்லோன்டைக் (Klondike) மற்றும் கலி/போர்னியா கோல்ட் ரஷ் (California Gold Rush) இம்மூன்று சுரங்கங்களிலிருந்து கிடைத்ததைவிட அதிகமானதாக உள்ளது. 2006 ஆம் ஆண்டு 1.8 பில்லியன் மதிப்பிலான உலோகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உலகிலேயே மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள மிகப்பெரிய சுரங்கம் என்ற பெருமையினை உடையது.

# உலகப்புகழ் ஓவியர்

**ஜியோவன்னி பெல்லினி**

(Giovanni Bellini)

**(கி.பி.1430-1516)**





# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நெடுங்குளம் பகுதிக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நெடுங்குளம் பகுதிக்கு விஜயம் செய்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அப்பகுதி மக்களின் வீடமைப்பு வசதிகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இப்பகுதி மக்களுக்கு காணிகளும் வீடமைப்பு ஏற்பாடுகளும் அமைச்சரால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலையில், வீடுகளை நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒப்புதலுக்கு ஏற்ப அமைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை நிவர்த்திக்கும் வகையிலேயே கடந்த புதன்கிழமை அமைச்சர் அப்பகுதிக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது நிகழ்த்தப்பட்ட கலந்துரையாடலில் உரிய விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொளவதற்கான பணிப்புரைகளை அமைச்சர் யாழ். பிரதேச செயலருக்கும் மாநகர முதல்வருக் கும், ஜே/61 கிராம சேவையாளருக்கும் நில அளவையாளருக்கும் வழங்கினார்.

அத்துடன் அப்பகுதியிலுள்ள நெடுங்குளத்தை ஆராய்ந்த அமைச்சர் அக்குளத்தை புனரமைப்பது தொடர்பிலும் அதனருகேயுள்ள மைதானத்தை புனரமைப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தினார்.இதில் யாழ். மாநகரமுதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# எட்டு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட ஆறுபேர் யாழ்.பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் இடம் பெற்ற எட்டு பாரிய குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட ஆறு சந்தேக நபர்கள் கடந்த வாரம் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மையில் கோப்பாயிலும் அரியாலைப்பகுதியிலும் நடைபெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் குறித்து பொலிஸ் புலனாய்வாளர்கள் விசாரணையில் ஈடுபட்டதாகவும் இதன்போது வீடு ஒன்று உடைத்து கொள்ளையிடப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை இடம் பெற்ற போது அங்கு சுவரில் காணப்பட்ட கைவிரல் அடையாளமொன்றை பெற்ற பொலிஸார் அதனை கொழும்பிற்கு அனுப்பிவைத்து பரிசோதனை செய்ததன் மூலமாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் அவரிடம் இருந்து பெறப்பட்டதகவல்களின் அடிப்படையில் மேலும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டதுடன் களவு போன ஒரு தொகுதி நகை பொருட்களும் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இவர்களில் நகைக்கடை உரிமையாளர் ஒருவரும் உள்ளடங்குவதாகவும் தெரிவித்த அவர் இவர்கள் கைது செய்யப்பட்டதற்கு பின்னர் இந்தவாரம் குற்றச்செயல்கள் குறைந்திருப்பதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து புலன் விசாரணை நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

(பா)

# கிராம அபிவிருத்தித் திட்டத்தை மீள முன் மொழியுமாறு கோரிக்கை

பொது மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்காமல் கட்டுடையில் கிராம அபிவிருத்தித்திட்டம் தயாரிக்கப்பட்டது ஏற்றுக் கொள்ளமுடியாது.அதுமட்டுமன்றி தவிசாளர் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மட்டும் அறிவித்து கிராம அபிவிருத்தித்திட்டங்களை முன்மொழிவது வரவேற்க கூடியது அல்ல என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே அனைத்து மக்களும் பங்கு கொள்ளக் கூடிய கூட்டத்தை ஒழுங்கு செய்து திட்டங்களை முன்மொழியுமாறு அங்குகூடிய மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டுடையில் மக்கள்பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை . இடம்பெற்றது.

இதில் முன்மொழிவுகள் எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக எதுவித காட்சிப்படுத்தல்களும் இடம் பெறவில்லை

மக்களுக்கு இவ்வாறான கூட்டம் தொடர்பான போதுமான அறிவித்தல் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கூட்டத்தை மீள வைக்குமாறு அம்மக்கள் அனைவரும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர். (92)



பாசையூர் புனித அந்தோனியார் ஆலய திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை இரவு வெகுவிமர்சையாக இடம்பெற்றது•அந்தோனியார் தேரில் ஆரோகணிப்பதைக் காணலாம். (25)

# பதிவிறக்கப் பெட்டகம்

சமூகத்தில் கருத்துருவாக்கம் செய்யும் சக்திகளான அரசியல்வாதிகள், அதிகார வர்க்கம், ஊடகங்கள், பெருமுதலாளிகள், எழுத்தாளர்கள்... அனைவரும் தம் நலனுக்கேற்ற வகையில் கருத்துருவாக்கத்தில் ஈடுபடுகின்றனர். மக்களின் மறதியே மூலப்பொருள். **– சுந்தர ராமசாமி**

ஜெயமோகனின் விஷ்ணுபுரம் போல, பிரபஞ்சனின் வானம் வசப்படும் போல, இரா.முருகனின் அரசூர் வம்சம் போல மன்னர்களின் அழுக்கு நடத்தைகளை நக்கலடித்துக் கொண்டிருப்பதும் ஒரு மேல்சாதி நடவடிக்கை என்ற அளவிலேயே பார்க்க முடிகிறது. மன்னர்கள் வரலாற்றில் அசிங்கமாக நடந்துகொண்டிருப்பதல்ல இப்போதைய பிரச்சினை. மலம் அள்ளுபவர்களையும், மரம் ஏறுபவர்களையும், முடியை மழித்து, உடையை அலம்பிச் சுத்தம் செய்பவர்களையும் கேவலமான ஸ்திதிக்குக் கொண்டுவந்த வஞ்சக சூழலின் வரலாற்றை நக்கலடிப்பதே என்னளவில் முக்கியமான இலக்கியம். **– சாரு நிவேதிதா**

வணிக நாவல் வாளி என்றால் இலக்கிய நாவல் பாதாள கரண்டி. கிணற்றுக்குள் போய் வரும் போது பாதாள கரண்டி நாம் எதிர்பார்க்காத பல கசப்பான விருப்பமில்லாத ஆனால் பல முக்கியமான பொருட்களை ஆழத்தில் இருந்து நமக்கு எடுத்து காட்டும். ஆனாலும் தாகம் எடுக்கும் போது வாளியை இறக்கி நல்ல தண்ணீர் மொண்டு குடிப்பதும் அவசியம் தான். **– அபிலாஷ்**

வெறும் வெள்ளைக் காகிதத்தைப் பெரிய அளவில் ஜனங்களிடம் விற்கமுடியாது. ஆனால் அதில் செய்தி இலக்கியம் என்று கறுப்பு மை பூசினால் ஆயிரக்கணக்கில் விற்கலாம். **– தி.ஜ.ரங்கநாதன்**

"போதும்... கடவுளை நிந்திக்காதே. கடவுள்தான் இப்போது அழுதுகொண்டிருக்கிறார். காலாகாலமாக மனிதர்கள் தங்களைத் தாங்களே கொன்றுகொண்டிருப்பதை அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரால் நம்மிடமிருந்து நம்மைக் காப்பாற்ற முடியவில்லை. அழாதே... உலகம் இப்படித் தான் படைக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு சந்தோசத்தைவிட துக்கமும், அமைதியை விட வேதனையும் தான் பிடித்திருக்கிறது. ரத்தத்தில் குதியாட்டம் போடுவதையே அவர்கள் விரும்புகிறார்கள். கொலையை அவர்கள் கொண்டாடுகிறார்கள்..." **– அகிரா குரஸோவா படத்தில்**

புதுமைப்பித்தன் தன் மனைவி கமலாவிற்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு நூலில் இது காணப்படுகிறது: தீவிரமான காசநோயினால் நுரையீரலின் இருபக்கங்களிலும் துவாரம் விழுந்து மருத்துவர்களால் கைவிடப்பட்ட புதுமைப்பித்தன் 'எனக்கு யாராவது செய்வினை வைத்திருக்கிறார்களா?" என்று மனைவியை கடிதத்தில் வினவுகிறார். தன் மகளுக்கு ஜாதகம் கணிக்கச் சொல்கிறார்.

சமூகத்தின் கீழ்மைகளையும் மூடத்தனங்களையும் எள்ளலும் பரிகாசமாயுமாய் அணுகிய ஒரு படைப்பாளி சுயவதையை எதிர்கொள்ளும் போது தன் சமநிலையை இழக்கும் தருணம் மிகக் கொடிது. மனதை உடல் வாதை வெல்லக்கூடிய கொடுமையான சமயங்களில் பெரும்பாலேனோர் தம்முடைய நம்பிக்கைகளின் வீழ்ச்சியில் மூழ்கிப் போகும் அபாயத்தில் உயிர்மூச்சுக்காக எதையாவது பற்றிக் கொள்ளக்கூடிய நிலையிடம் சரணடைந்து விடுவது இயல்புதான்.

Ship of Theseus திரைப்படத்தில் ஜெயின் துறவி ஒருவர், மருந்து நிறுவனங்கள் கடுமையான மருந்துகளை மிருகங்களின் மீது பிரயோகிப்பதை தடுக்கும் விதமாக தொடர்ந்து போராடுவார். அவருடைய ஈரல் கடுமையான பாதிப்புக்குள்ளாகி உயிராபத்தை சந்திக்க நேரும் போது கூட மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ள மறுத்து விடுவார். ஆனால் உடல் தன்னுடைய வாதையின் வன்முறையை முழுவீச்சில் அவர் மீது செலுத்தும் போது அதன் உச்சக்கட்டத்தில் அதனிடம் சரணடைவதை தவிர அவருக்கு வேறு வழியிருக்காது.

'வாழ்க்கையை கொண்டாடுகிறேன்' பேர்வழி என்று பல்வேறு கேளிக்கைகளின் மூலமாக தமது உடலை தொடர்ந்து தண்டித்துக் கொண்டே இருப்பவர்க்கு கடுமையான சவால் காத்திருக்கிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது அரதப்பழசான வாக்கியமாக இருந்தாலும் அதுவே இறுதியில் நமக்கு அழுத்தமாக உரைக்கும் உண்மை. **– சுரேஷ் கண்ணன்**








யாழ்.பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞானப் பீரிவில் அமைந்துள்ள தாவரவியற் துறையின் ஆய்வுகூடம் தூறல் முறை நீர்ப்பாய்ச்சல் தாவரவியல் பூங்கா திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிரேஷ்ட பிரதிநிதி ஒருவர் மங்கள விளக்கேற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ஸ்ரீ சண்முகராசா விரிவுரை மண்டபத்தை திறந்து வைப்பதையும் ஆய்வுகூட மண்டப தொகுதியில் மரக்கன்று ஒன்றை நாட்டி வைப்பதையும் காணலாம்.

# அனைத்து மக்களும் சம உரிமைகளுடன் வாழக்கூடிய தீர்வுத் திட்டம் வேண்டும்

## ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

அனைத்து இன மக்களும் சம உரிமைகளுடன் வாழக் கூடிய பின்னணி உருவாக்கப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 25ஆம் பிரதிநிதிகள் மாநாடு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அதில் உரையாற்ற அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்துள்ளார். பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்படக் கூடிய வகையிலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமமாக வாழக் கூடிய வகையிலும், தீர்மானங்களை எடுக்கக் கூடிய வகையிலும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபையின் ஊடாக சுயாட்சி அதிகாரங்களை வழங்கி அதன் ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்குத் எதிராக் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் நாட்டை காட்டிக் கொடுக்கும் திட்டங்கள் எதுவும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்த நாடாளுமன்ற வாக்கெடுப்பின் போது அசாங்கத்திற்கு ஆதரவளிப்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் எனவும், முஸ்லிம் மக்கள் ஆபத்துக்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களுக்கு நிகரான உரிமைகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் எனவும், நாட்டை துண்டாட எண்ணியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து நாட்டை பிளவுபடுத்த முயற்சிப்பதாக சிலர் போலிப் பிரசாரம் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். தேசப்பற்றாளர்கள் என தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் தரப்பினர் உண்மையிலேயே தேசத்துரோகிகள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரும்பான்மையான சிங்கள பௌத்த மக்கள், தமிழ் முஸ்லிம்களை துன்புறுத்த முயற்சிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# ஆளும் கட்சிக்கு ஆதரவு இன்னமும் தீர்மானமில்லை

## அத்துரலிய ரத்னதேரர்

ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஆதரவளிப்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதனை இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ரதன தேரர் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட உள்ளதாக ஊடகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அனைத்து ஊடகங்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## ஊடக அமைச்சின் செயலாளர் வலியுறுத்து

அனைத்து ஊடகங்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் கலாநிதி சரித்த ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக ஒரு சிறிய சம்பவத்தைக் கூட பெரிய சம்பவமாக விபரிக்க கூடிய நிலைமை தற்போதுள்ளதாக அவர் கூறினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறியதொரு சம்பவம், பெரியதொரு விடயமாக திரிவுபடுத்தப்பட்டு வதந்திகள் பரப்பி பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதாக சரித்த ஹேரத் குற்றஞ்சாட்டினார.

தவறான தகவல்கள், செய்திகள் மூலம் நாட்டில் பாரிய குழப்ப நிலையை ஏற்படுத்தக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார். செய்தியை நன்கு அறிந்ததன் பின்னர் பொறுப்புடன் அவற்றை மக்களுக்கு அறியத் தர வேண்டும் எனத்தான் ஊடகங்களிடம் கேட்டுக் கொள்வதாக சரித்த ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும்

## ஐ.தே.க.



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள வானூர்தி நிலையம் மற்றும் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் என்பன தொடர்பாக சர்வதேச கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.இது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அறிக்கைகள் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டன.

சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு நிறுவனம் ஒன்றின் தலையீட்டுடன் குறித்த 3 செயற்றிட்டங்கள் தொடர்பான கணக்காய்வுகளை நடத்த முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

# ஆசிரிய அபிவிருத்தி நிலையம் இலங்கையில் அமைக்க ஏற்பாடு

இலங்கையின் வேண்டுகோளை அடுத்து, இலங்கையும் யுனெஸ்கோவும் இணைந்து, மீப்பே பிரதேசத்தில், தென்னாசிய ஆசிரிய அபிவிருத்தி நிலையமொன்றை அமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஐக்கிய நாடுகள் சபையின் உதவியின் கீழ் செயற்படும் "வகை 2" நிலையமாக இது காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தின் முழுமையான நோக்கம் ஆசிரியர்களின் அறிவு மற்றும் பயிற்சியை தரமுயர்த்துவதாகும்.கொள்கை அபிவிருத்தி, தரமான ஆசிரியர் அலையை கட்டியெழுப்புவதில் மாற்றத்தை கொண்டுவருதல் மற்றும் ஆராய்ச்சிகளை விரிவாக்கல் என்பவற்றுக்கு ஆதரவு வழங்குவதற்கான தலைமைத்துவம் அளித்தல் என்பவை மூலம் தென்னாசிய பிராந்தியத்தின் ஆசிரியர் அபிவிருத்தி செயன்முறையை மாற்றியமைத்தலில் இந்த நிலையம் முக்கிய வகிபாகத்தை கொண்டிருக்கும்.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் இரினா பொக்கோவா, கல்வி அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க ஆகியேர் இந்த நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கடந்த 10 ஆம் திகதி கையொப்பமிட்டனர்.

இதன் போது, இலங்கையின் கலாசார அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க பிரசன்னமாகியிருந்தார்.

கல்வியில், யுனெஸ்கோவின் பலத்த ஈடுபாட்டுக்கு இந்த மையம் சாட்சியாகும். கூடுதலான, நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான அவசர தேவை காணப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான நிலையம் அமைவது வரப்பிரசாதமாகும். தற்போது 250 மில்லியன் மக்கள் அடிபபடை விடயங்களைக்கூட கற்க வசதியின்றி உள்ளனர் என பொக்கோவா கூறினார்.

யுனெஸ்கோவுக்கான நிரந்தர பிரதிநிதி கருணாரத்ன ஹங்கவத்த மற்றும் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இந்தியா, துருக்கி, பாகிஸ்தான், ஆகிய நாடுகளின் நிரந்தர பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# புகையிலை கடத்தல் ஐவர் கைது

இராமமேஸ்வரம், பாம்பன் பகுதியில் இருந்து இலங்கைக்கு 5 இலட்சம் ரூபா பெறுமதியுடைய புகையிலையை கடத்த முற்பட்டதாக கூறப்படும் ஐவரை நேற்று கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, பாம்பன் கடற்கரையிலுள்ள படகுகளை சோதனையிட்ட போது 300 கிலோ கிராம் நிறையுடைய புகையிலையை கைப்பற்றியதுடன் ஐவரையும் கைது செய்துள்ளனர்.படகு ஒன்றினையும் கைது செய்யப்பட்டவர்களுக்கு சொந்தமான கார் ஒன்றினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்தனர்.

VIII) பாடலில் வந்துள்ள பெயரெச்சம் ஒன்று எழுதுக. ..............................

IX) பாடலில் கூறப்பட்டுள்ள மரங்கள் இரண்டு தருக. ..............................

X) பாடலில் வந்துள்ள ஒத்த ஓசைச் சொற்கள் இரண்டு எழுதுக..............................

**சொற்களை ஒழுங்காக்கிக் கருத்துள்ள வாக்கியங்கள் அமைக்குக.**

I) அவற்றைப் / நினைத்தது / நரி / சாப்பிட / பிடித்தச்

..............................

II) உங்களது / வாழும் / தூய்மையாக / வீட்டையும் / நீர்கள் / சூழலையும் / வைத்திருங்கள்.

..............................

03. **பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

I) கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

II) ..............................

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

..............................

04. **வெற்றிடத்திற்குப் பொருத்தமான மிகச் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

I) .............................. உடையார் இகழ்ச்சி அடையார்.

(முயச்சி, முயல்சி, முயற்சி, முயற்ச்சி)

II) .............................. பயன்பாடு வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

(கனிமியின், கணனியின், கணினியின், கனினியின்)

III) நான் மரத்தில் ஏறி .............................. பிடுங்கினேன்.

(இளனி, இளனீர், இளநி, இளநீர்)

05. **வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

I) I want to play ..............................

(Rice, Pencil, Plant, Netball)

II) வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.



இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) வெளியான பயிற்சி வினாத்தாளின் தொடர்ச்சி...

**பின்வரும் சொற்களை வாசிக்க. இதற்கேற்ப 27, 28 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

மீனினம் ஓடிப் பரக்குதம்மா- ஊடே
(மேகம்) ஓடமொன்று செல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் ☆

27. (மேகம்) என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்
(1) வெள்ளி (2) பொன் (3) தங்கம்

28. ☆ என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்
(1) நனையுதம்மா (2) பொங்குதம்மா (3) முழுகுதம்மா

29. முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் நின்ற குழந்தை தன் உருவைப் பார்த்து கூறிய கூற்றுக்களில் சரியான கூற்று
(1) இக் கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் சகோதரனாவர்
(2) இக் கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் மூத்தமகன் ஆவார்
(3) எனது தாயாரின் தங்கையாவார்

30. முகம் பார்க்கும் கண்ணாடியில் "P" காணப்பட்டால் உருவின் உண்மை உரு பின்வருவனவற்றுள் எது?
(1) q (2) b (3) d

**31-40 வரையுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(குகை, பாக்கு, கைக்கடிகாரம், சோபா, யசோ, மதிய)


**அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

31. மதிய யசோ சோபா .............................. .............................. ..............................

32. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரில் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைத்து இப்புதிரை நிரப்புக. தரப்பட்டுள்ள உதவிக் கூற்றுக்களை பயன்படுத்துக.


**இடமிருந்து வலமாக**
1) நட்சத்திரத்தை இப்படியும் அழைப்பர்
2)சிங்கத்தின் உறைவிடம்
3) இது ஒரு மாதத்தின் பெயர்

**மேலிருந்து கீழ்**
1) இரவில் ஒளி தருவது
4) புறாவைக் காத்த அரசன்



33.1 ஆம் 2 ஆம் தராசுகளில் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் நிறைகளின் மொத்தத்தை அவதானிக்க. மூன்றாம் தராசில் உள்ள பொருள்களின் நிறை எத்தனை கிலோகிராம்.

1 ம் தராசு 2 ம் தராசு 3 ம் தராசு




4 கிலோகிராம் 5 கிலோகிராம் ..............................

34) இடைவெளி நிரப்புக.
அப் பெரிய மரத்தின் கி ........கள், கு........ர், நி...... ....... ப் பரப்பின.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க | ச | ஞ | ட | க | ற் | ப | ச | ட |
| க | ந | த | க | வ | த | க | ம | ய |

35) இங்கு அதிக தடவை குறிக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்து யாது? ..........................................




36) இங்கு அதிக தடவைகள் வந்துள்ள வடிவம் யாது? ..........................................

**ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.**




37) எழுத்து W இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது? ..................................

விஜி, துஷி, வசி ஆகிய மூன்று மாணவர்கள் கடை ஒன்றுக்கு நடந்து செல்லும் பாதைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்கள் பயணத்தை ஆரம்பிக்கும் இடங்கள் L, M, N ஆகிய எழுத்துக்களாலும் முடிவிடங்கள் P, Q, R என்னும் எழுத்துக்களாலும் குறிக்கப்பட்டுள்ளன.




38) அதிக தூரம் சென்றவர் யார்? ..........................................

39) இம் மாணவிகளுள் குறைவான தடவைகள் திரும்பிச் சென்ற மாணவி யார்? ..........................................

40) ஐம்பத்தைந்தாவது ஆண்டு எடுக்கப்படும் விழா .......................................... எனப்படும்.



# பகுதி I

**01. பின்வரும் பாடலை வாசிக்க.**

நல்ல நல்ல மரங்கள்
நாம் வளர்க்கும் மரங்கள்
தின்ன இனிய கனிகள்
தினமும் எமக்குத் தருமே.

நீண்டு வளரும் தென்னை
நிழல் தருமாம் ஆல்பார்
ஆண்டு வளரும் பனையும்
ஆன பலன்கள் தருமாம்.

மாவும் பலாவும் வாழை
யாவும் தரும் முக்கனிகள்
தாவும் செடிகள் சூழ
தளிர்த்து வளரும் மரங்கள்

**இப்பாடலைக் கொண்டு (I) இலிருந்து (X) வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**

I) "நல்ல" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ..........................................

II) "கனிகள்" என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக. ..........................................

III) "ஆன பலன்கள் தருமே" என்ற வசனத்தில் அடங்கும் பனையின் பயன் ஒன்று எழுதுக.
..........................................

IV) "இனிய கனிகள்" என்பதிலுள்ள அடைமொழியை எழுதுக.
..........................................

V) பாடலில் வந்த படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக.
..........................................

VI) மா, பலா, வாழை என்பதற்குப் பதிலாக எழுதக் கூடிய ஒரு சொல்லை எழுதுக.
..........................................

VII) "நாம் வளர்க்கும் மரங்கள்" என்ற வாக்கியத்தை ஒருமையில் எழுதுக
..........................................

# வெல்ல உற்பத்தி தொழிற்சாலை கண்டாவளையில் திறந்து வைப்பு



(கிளிநொச்சி)

நாங்கள் நிதானமான அரசியல் அணுகுமுறையூடாகவே மக்களின வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி வருகிறோம். அந்த வகையில் படை முகாமாக இருந்த வெல்ல உற்பத்தி தொழிற்சாலை இன்று மீளக் கட்டியெழுப்பப் பட்டுள்ளது. இதனூடாக மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத் தப்படும் என ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் கண்டாவளை வெலிக் கண்டல் பகுதியில் வெல்ல உற்பத்தி தொழிற்சாலை திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களின் இந்த அரசியல் அணுகுமுறையினால் மக்களின் பல பிரச்சினைக்குரிய தீர்வினையும் பெற்றுக்கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை கடந்தகால செயற்பாடுகளின் அனுபவமாக காணப்படுகிறது. நாம் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைகின்ற அரசிய லையே செய்து வருகின்றோம். ஆனால் இங்கே சிலர் தங்களின் அரசியலுக்காக மக்கள் மத்தியில் பிரச்சினைகளை மேலும் வளர்த்து வருகின்றார்கள்.

நாங்கள் படை முகாம்களை மக்களுக்குரிய சொத்துகளாக மாற்றி வருகின்ற போது அவர்களோ மக்களுக்குரியவற்றை தங்களின் விவேகமற்ற நடவடிக்கைகளால் படைமுகாம் களாக மாற்றி வருகின்றனர் எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

இந்தக் கண்டாவளை வெல்ல உற்பத்தி நிலையம் கூட ஒரு படை முகாமாக இருந்தது. அதனை அரச அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மீளப் பெற்று இன்று பலருக்கு தொழில் வாய்ப்பினை வழங்குகின்ற ஒரு தொழிற்சாலையாக 150 இலட்சம் ரூபா செலவு செய்து மாற்றப்பட்டிருகின்றது. இது பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதோடு இவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்பினையும் பெற்றுக்கொடுக்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும், நாங்கள் நிதானமான அணுகுமுறையினால் மக்களுக்கான பல நல்ல விடயங்களை மேற்கொண்டு வருகின்றோம். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் எங்கள் கட்சி நீண்ட கால ஜனநாயக அரசியலில் இதனையே மேற்கொண்டு வருகிறது.

வீரமாக உணர்ச்சியாக பேசி மக்களுக்கு கிடைக்கின்றவற்றையும் கிடைப்பெறாமல் செய்கின்றவர்கள் அல்ல நாம். நிதானமான நடவடிக்கையால் பல விடயங்களை சாதித்திருக்கின்றோம், பிரதேசத்தின் அபிவிருத்தியினையும் மேற்கொண்டுளளோம் என்றார்..

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மதனரூபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பனை அபிவிருத்தி சபைத தலைவர் பசுபதி சீவரத்தினம், கண்டாவளை பிரதேச் செயலர் முகுந்தன், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி யாளர் பாலச்சந்திரன், ஓய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் தவராசா, வட மாகாண பனை தென்னை வள பேரிணையத்தின் தலைவர் செல்வரட்னம், பூநகரி பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் துரைசிங்கம் மற்றும் சங்கத்தின் அங்கத்தவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## புதிய நிர்வாகத் தெரிவு

பொலிகண்டி கந்தவனக் கடவை அருள்மிகு கல்யாண வேலவர் ஆலய ஒன்பதாம் திருவிழா உபயகாரரால் அன்னதான சபையின் நடப்பாண்டிற்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இதில் தலைவராக மகாலிங்கம் ஜீவரஞ்சன், உபதலைவராக செல்வமாணிக்கம் ஜெயகணேஸ் செயலாளராக பரமானந்தராசா விமல்ராஜ், உப செயலாளராக முருகேசு பாலச்சந்திரன், பொருளாளராக சுப்பிரமணியம் ரங்கநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

ந்ர்வாக சபை உறுப்பின்ர்களாக வேலுப்பிள்ளை ஆனந்தசாமி, சிவசாமித்துரை குலவீரசிங்கம், சுப்பிரமணியம் அருந்தவராசா சிவனேஸ்வரராசா மதியழகன், ஜெயக்குமார் ஜெனோ மாசிலாமணி சந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(116)

## சட்டவிரோத கசிப்பு பெண்ணுக்கு அபராதம்

நெல்லியடி துன்னாலை கிராமத்தில் கசிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் சட்டவிரோத கசிப்பு நடவடிக்கை குறித்து நெல்லியடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து குற்றவாளிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (18)

## இந்தியப் பிரதமர் மோடிக்கு மகஜர் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

முற்போக்கு தமிழ்த் தேசிய கட்சி 3 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி புதிதாக பதவியேற்றுள்ள இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் நரேந்திரமோடிக்கு மகஜர் ஒன்றினை கையளிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வு நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கைலாச பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து பாதயாத்திரையாகப் புறப்பட்டு இந்தியத் துணைத் தூதரகத்துக்குச் சென்று இந்த மகஜரைக் கையளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந் நிகழ்வுக்கு அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு முற்போக்கு தமிழ்த்தேசியக் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

## சுற்றுச்சூழல் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

வலி.மேற்கு பிரதேச சபை வேள்ட்விஷன் நிறுவனத்துடன் இணைந்து சர்வதேச சுற்றுப் புறச் சூழல் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டியில் பரிசில்களைப் பெற்ற பாடசாலை மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் விபரம் வருமாறு,

**கவிதைப் போட்டி**

**மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**

கா.ஹலைகசனா, (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்),செ.செல்வகுமார், த.திலக்சிகா, மு.குபேந்தினி, ச.தமிழினி, சி.கிருஷிகா, தே.சிந்துஜா, ஜெ.டர்சிகா

**விக்டோறியாக் கல்லூரி**

கு.லக்சிதா, சூ.சேயோன், த.மோகனரூபன், சி.இந்துஜா, பொ.இன்னிசைத் தமிழன், ச.மதுகரி, நே.சிந்துஜன், க.யசோதா, சு.அனுசன், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம், ச.தனுசன்


**பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்**


சி.டினுசனா, க.மயூரதி, வி.பிரணவன், கு.அபிராமி


**வட்டு. மத்திய கல்லூரி**

வி.துஷாந்தி, க.நிலுஹிகா, யோ.மாதங்கி, க.வித்யா, சு.பங்குஜா, தி.ஜனனி, சி.டர்சிகா..

தொடரும்..(25)







அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்திய கம்பன் விழாவின் இறுதி நாள் மாலை நிகழ்வுகள் நேற்று முன்தினம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் இசை ஆசிரியர் வாசஸ்பதி ரஜீந்திரனை ஆசிரியர் வாகினி ஸ்ரீதரன் கௌரவிப்பதையும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற வழக்காடு மன்றில் வழக்காடிய ரீ.ரெங்கராஜா, புலவர் மா.இராமலிங்கம், பேராசிரியர் வி.அசோக்குமாரன், இரா.செல்வவடிவேல் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (10)

## ஈராக்கில் உள்நாட்டு போர்

# 1700 இராணுவ வீரர்களை சுட்டுக்கொன்றனர் தீவிரவாதிகள்



(பாக்தாத்)

ஈராக்கில் ஷியா பிரிவினரின் தலைமையிலான அரசுக்கு எதிராக சன்னி பிரிவு தீவிர வாதிகள் உள்நாட்டு போரில் ஈடு பட்டுள்ளனர். இராணுவத்துடன் போரிடும் அவர்கள் மொசூல், திக்ரித், கிர்குக் உள்ளிட்ட பல முக்கிய நகரங்களை பிடித்து விட்டனர்.

தலைநகர் பாக்தாத்தை நெருங்கி வருகின்றனர். தீவிர வாதிகளின் முன்னேற்றத்தை தடுக்க அமெரிக்க விமானம் தாங்கிய போர்க்கப்பலை ஈராக் குக்கு அனுப்பியுள்ளது.

போரின் போது இராணுவ வீரர்கள் பலரை தீவிரவாதிகள் பிடித்துச்சென்றனர். அவர்களை பணய கைதிகளாக வைத்திருந் தனர். அவர்களில் 1700 பேரை சுட்டுக் கொன்று விட்டதாக தீவி ரவாதிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களது வேலயத் சலா ஹூத்தீன் இணையத்தளத்தில இத் தகவலை வெளியிட்டுள்ளனர். மேலும், இராணுவ வீரர்களை வரிசையாக குனிய வைத்து துப் பாக்கியால் கொடூரமாக சுட்டுக் கொல்வது போன்ற போட்டோக் களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

சலாஹுத்தீன் மாகாணத்தில் ஒரு மறைவிடத்தில் வைத்து கொலைகள் அரங்கேற்றப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. ஆனால் அப்பகுதியில் பெரிய அளவில் மொத்தமாக இறுதிச் சடங்குகள் நடந்ததாக தகவல்கள் எதுவும் இல்லை.

எனவே, இது நடந்தது உண் மையா என உறுதிப்படுத்த முடிய வில்லை. ஒருவேளை கொலைச் சம்பவம் வேறு பகுதியில் நடந் திருக்கலாம் என்றும் கருதப்படு கிறது.

சன்னி தீவிரவாதிகளுக்கு எதிராக போராட ஷியா பிரிவி னரும் ஆயுதம் ஏந்த வேண்டும் என மதகுரு அயர்துல்லா அலின அல் சிஸ்தானி கடந்த சனிக்கிழமை அழைப்பு விடுத் தார். அதை ஏற்று ஏராளமான வர்கள் திரண்டனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த தீவிரவாதிகள் இராணுவ வீரர் களை சுட்டுக் கொன்றுள்ளனர். ஈராக் மட்டுமின்றி சிரியாவிலும் சன்னி பிரிவு தீவிரவாதிகளின் அட்டூழியம் நடைபெற்று வரு கிறது. கடந்த ஆண்டு டமாஸ் கல் புறநகரில் விஷ குண்டு களை வீசி 1400 பேரை கொன்று குவித்தனர்.

## ரஷ்ய தூதரகம் மீது தாக்குதல் உக்ரைனுக்கு அமெரிக்கா கண்டனம்

(வொஷிங்டன்)

உக்ரைனில் உள்ள ரஷ்ய தூதரகம் தாக்கப்பட்டதை, அமெரிக்கா கண்டித்து உள்ளது ரஷ்யா உட்பட பிற நாடுகளின் தூதரகங்களை பாதுகாக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தர விட்டு உள்ளது.

ரஷ்யாவுக்கும், சோவியத் ரஷ்யாவிலிருந்து வெளியேறிய, உக்ரைன் உட்பட பல நாடுகளுக்கும் இடையே, மோதல் நீடிக்கிறது. அண்டை நாடான உக்ரைனின் ஒரு மாகாணமான, கிரிமியா தீபகற் பத்தை, ரஷ்யா, சமீபத்தில் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இதற்கு உக்ரைன், கடும் கண்டனம் தெரிவித்தது.

இதனால் உக்ரைனில் உள்ள ரஷ்ய ஆதரவாளர்களுக்கு ஆயு தங்களை வழங்கிய ரஷ்யா, உக்ரைனுக்கு எதிராக போராட உத்தர விட்டுள்ளதால் உக்ரைனின் கிழக்குப்பகுதியில் இரத்தக்களரி ஏற்பட்டு உள்ளது.இதனால் ரஷ்யா மீது கடும் கோபம் கொண்டுள்ள உக் ரைன் நேற்று முன்தினம் உக்ரைன் தலைநகர் கீவ் நகரில் இருக் கும் ரஷ்ய தூதரகம் மீது தாக் குதல் நடாத்தியது. இதனால் உக்ரைன் ரஷ்யா இடையே மோதல் மேலும் அதிகரித்து உள்ளது.

தூதரகம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்து உள் ளது.

உலகச் செய்திகள்

# அயல்நாடுகளுடன் சுமூக உறவு இந்தியா ஆர்வமாகவுள்ளது

## பிரதமர் மோடி தெரிவிப்பு



அயல்நாடுகளுடன் சுமூக மான உறவை மேற்கொள்ள இந்தியா ஆர்வமாக உள்ளது அந்தவகையில் பூடானுடனான பொருளாதாரக் கூட்டுறவு மேலும வலுப்படுத்துவதில் இந்தியா விருப்பமாகவுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி உறுதிபடத் தெரிவித்தார். பாரதத்துக்காக பூடான்-பூடானுக்காக பாரதம் என்று சொல்லும் வகையில் இரு நாட்டு உறவுகளும் மேம் பட வேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் அவர் தெரி வித்தார்.

பூடான் தலைநகர் திம்புவில் மன்னர் ஜிக்மே கேஸர் நாம்கி யால் வாங்சுக் மற்றும் பிரதமர் ஷெரிங் தோப்கே ஆகியோருடன ஞாயிற்றுக்கிழமை நடாத்திய பேச்சுவார்த்தைக்கு பிறகு, அவர இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தப்பேச்சுவார்த்தை குறித்து, அதிகாரிகள் தரப்பு தெரிவிக் கையில், பூடான் மன்னர் மற்றும் பிரதமருடனான பேச்சுவார்த் தைகளின்போது, இரு நாடு களிடையேயான உறவை அதிகரிப்பது குறித்தும், பொரு ளாதார கூட்டுறவை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்தியா- பூடான் இடையே யான இருதரப்பு உறவு வலுப் படுத்தப்படும் என பேச்சுவார்த் தையின்போது மோடி உறுதி யளித்தார். இதனை அவர், பி-4-பி - பாரதத்துக்காக பூடான், பூடானுக்காக பாரதம் என்று குறிப்பிட்டார்.

இந்தியாவில் பயிலும் பூடான் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை இரட்டிப்பாக் கப்படும் என்றும், பூடான் இளை ஞர்கள் படித்து பயனடைவ தற்கு வசதியாக டிஜிட்டல் நூல கம் அமைப்பதற்கு அந்நாட் டுக்கு இந்தியா உதவி செய்யும் என்றும் மோடி உறுதியளித்தார் என தெரிவித்தன.

## ஆப்கானில் குண்டுவெடிப்பு



ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடி ப்புச் சம்பவத்தில் 11 பேர் பலியாகினர். தலிபான் போராளிகளே இந்தத் தாக் குதலை மேற்கொண்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தல் இடம் பெற்று வருகின்றது.இந்த நிலையில், தேர்தலை புறக்கணிக்குமாறு தலிபான்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.இந்த நிலையிலேயே இந்த தாக்குதல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

## மாயமான விமானத்தை கடவுளின் ஆசியுடன் கண்டுபிடிப்போம்

### மலேசிய அரசு உறுதி

மாயமான மலேசிய விமா னத்தைக்கண்டுபிடிப்போம் என்று மலேசிய அரசு உறுதியளித்துள் ளது.

மலேசிய விமானம் மாய மாகி 100 நாட்கள் கடந்து விட்ட நிலையில் இன்னும் தெளிவான தகவல்கள் ஒன்றும் வெளியாக வில்லை.

இந்நிலையில், மாயமான விமானம் குறித்து நியூசிலாந்து நாட்டைச்சேர்ந்த எழுத்தாளர்கள ஈவான் வில்சன் மற்றும் ஜெப் டெய்லர் இருவரும், விரைவில் வெளிவர உள்ள புதிய புத்தகத தில், விமானம் விபத்தில் சிக்க வில்லை என தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து விமானம் மாயமாகி 100 நாட்கள் கடந்த நிலையில், அதனை தேடுவது உண்மையில் அதிக சவாலான ஒன்றாக உள்ள நிலையில், விமானத்தை தேட நாங்கள் மீண்டும் புத்துணர்வுடன் தயாராக உள்ளோம் என்று மலேசியாவின் போக்குவரத்து துறை மந்திரி ஹிசாமுத்தீன் உசைன் தெரிவித்துள்ளார்.


விமானத்தைத்தேடுவதில் மிக கடினமான சூழ்நிலையிலும் சிறப்பாக செயற்பட்டதற்காக அரசுக்கு பாராட்டுகள் கிடைக் கும். அதற்கு சாதகமாக வர லாறு நியாயத்தை தீர்மானிக் கும் எனவும் உசைன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விமானம் மாயமாகி 100 நாட்கள் கடந்த நிலையில், அதன இழப்பு அனைத்து மலேசிய மக்களின் மனதிலும் வலியை தோற்றுவித்துள்ளது, உலக மக் களையும் மனதளவில் பாதித் துள்ளது.

விமானம் கண்டுபிடிக்கப்படும் வரையில், எங்களால் ஓய்வெ டுக்க முடியாது. ஓய்வெடுக்க வும் மாட்டோம். விமானிகள் மற்றும் பயணிகளின் குடும்பத் தினரை நாங்கள் கைவிட்டு விட முடியாது. நாங்கள் மாய மான விமானத்தை கடவுளின் ஆசியுடன் கண்டுபிடிப்போம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# எம்மை வீண் வம்புக்கு இழுக்கிறது அ.தி.மு.க.

## கருணாநிதி குற்றச்சாட்டு



"காவிரி மேலாண்மை வாரி யம் தொடர்பாக பிரதமர் மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், தி.மு.க.,வை வீண் வம்புக்கு இழுத்துள்ளார் என, தி.மு.க., தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை:இம்மாதம் 13ஆம் திகதி பிரதமர் மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், "காவிரி மேலா ண்மை வாரியத்தை உடனே அமைக்க வேண்டும், என, குறிப பிட்டுள்ளார்.இம்மாதம் 10ஆம் திகதி, ஜெயலலிதா எனக்கு பதிலளித்து வெளியிட்ட அறிக் கையில், "அதை செயற்படுத்த, பிரதமருக்கு கால அவகாசம் தர வேண்டும் என அவர் எழு தியதை, அவரே மறந்து விட் டார்.பிரதமருக்கு, முதல்வர் எழுதிய கடிதத்தில், தேவை யில்லாமல், தி.மு.க.,வை வீண் வம்புக்கு இழுத்துள்ளார். ஏற்க னவே, ஆட்சியில் இருந்த தி.மு.க., அரசு, நடுவர் மன்றத் தின் இறுதித் தீர்ப்பை வெளியிட, மத்திய அரசை வற்புறுத்தவில்லை என்ற குற்றச்சாட்டையும் கூறி யுள்ளார்.நடுவர் மன்றம் இடைக் கால தீர்ப்பு வழங்கிய போதும், கர்நாடக அரசாக பார்த்து, தண் ணீர் திறந்து விட்டால் தான் உண்டு என, கூறியவர் தான் ஜெய லலிதா. இடைக்கால ஆணையை நடைமுறை படுத்துவது பற்றி, மத்திய அரசிடம் விளக்கம் கேட்டு, ஒன்பது மாத கால தாம தத்திற்கு பின், பதில் அனுப் பியவர் தான் ஜெயலலிதா.

தொடர்ந்து, 2002 இல் காவிரி ஆணையக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல், இரத்து செய்தவர் ஜெயலலிதா. இப்படிச்சொல்லிக கொண்டே போகலாம். இவ் வாறு, கருணாநிதி கூறியுள்ளார்.

## சாண்டோஸ் மீண்டும் வெற்றி

(பொகோட்டா)

சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில் வாக்குரிமை பெற்றவர் களில் 94.7 சதவீதம் பேர் இந்தத் தேர்தலில் ஓட்டளித் திருந்த னர்.நேற்று முன்தினம் நடந்த வாக்கு எண்ணிக்கையில் முதல் சுற்றில் இருந்தே முன்னிலை வகித்த தற்போதைய அதிபர் ஜுவன் மேனுவேல் சாண்டோஸ், 50.7 சதவீதம் வாக்குகள் பெற்று மீண்டும் வெற்றியடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஆஸ்கார் இவான் சுலுவாகா 45.2 சதவீதம் வாக்குகள் பெற்று தோல்வியை தழுவினார்.

# அபிவிருத்தியை மட்டுமல்ல அரசியல் தீர்வையும் எட்டமுடியும்

## நம்பிக்கை வைத்து செயற்படுங்கள் என்கிறார் ஜெகன்



(யாழ்ப்பாணம்)

வாழ்வாதாரப் பிரச்சினைகளை எங்கள் முன் கொண்டு வந்துள்ள உங்களுக்கு அதற்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டியது எமது கடமையாகும். அமைச்சரிடம் சென்றால் எந்த விதமான உதவியையும் பெற்றுக் கொள்ளலாம் என ஆணித்தரமாக நம்பும் மக்கள் ஏன் அரசியலிலும் நிரந்தர தீர்வையும் பெறறுத் தருவார் என நம்பிக்கை கொண்டு அவருக்கு அரசியல் பலத்தை கொடுக்க முன் வருவதில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.

எழுதுமட்டுவாள் பகுதி மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்திக் கொள்வதற்காக அப்பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் மக்கள் மத்தியில் உரையாற்றிய ஒருங்கியைப்பாளர் ஜெகன் மேலும் கூறுகையில்,

வாழ்வாதாரத்தில் அழிந்துள்ள எமது மக்களின் வாழ்வியலை நோக்கியதான எமது பயணத்தில் நாம் அபிவிருத்தியின் அநேக பலனைக் கண்டுள்ளோம். நாட்டின் உள்நாட்டு யுத்தம் காரணமாக 3 தடவைக்கு மேல் இடம்பெயர்ந்து அழிவுற்ற பகுதியாக எழுதுமட்டுவாள் பகுதி உள்ளது. நிச்சயமாக அமைச்சரூடாக உங்கள் பகுதி வாழ்வாதாரங்களை அபிவிருத்தி செய்துதர நடவடிக்கைஎடுக்கிறேன். நாம் யாரையும் பழிவாங்குவது கிடையாது. எம்மை எட்டி உதைத்த வரையும் அனைத்து உதவிகளையும் செய்து வருபவர்கள் தான் நாங்கள்.

யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்திகளையும் அரசின் ஊடாக பெற்றுத்தருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான எமது கட்சிதான். இந்த யதார்த்த நிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் எமது கட்சி செய்த சேவைகள் மூலம் அரசியல் ரீதியில் பலம் மிக்கவர்களாக உங்கள் முன் வரமுடியாமல் இருப்பது வேதனை அளிக்கிறது.

1987 இல் இந்தியா கொண்டு வந்த வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வை பெற்றிருந்தால் முள்ளிவாய்க்கால் வரை சென்று ஒட்டுமொத்த அழிவுகளையும் கண்டிருக்கத் தேவையில்லை.

ஐ.நா. விசாரணைக்கும் தேவை இருந்திருக்காது. நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிந்த கிழக்கை இணைத்து தீர்வை எட்டுவது இனி சாத்தியமற்ற ஒன்று. ஒருகாலத்தில், புலிகளுக்கு எதிராக இருந்து பின் புலிகளின் சக்திகளாக இணைந்து தற்போது தமிழ்த் தேசியம் பேசி உங்கள் வாழ்வியலையே அழிக்கின்றார்கள். இத்தனை அழிவுகளின் பின்பும் தமிழ் மக்கள் இதைப் புரிந்து கொள்ளாதது புதிராகவே உள்ளது.

மாகாணசபையை வென்று பல மாதங்கள் கடந்து விட்டன. இன்று வரை மக்களது தேவைகளை அறிந்து உதவிகள் ஏதாவது செய்திருக்கிறார்களா? மக்களை சந்திப்பதும் மக்களுக்கான உதவிகளை செய்து கொடுப்பதும் ஈ.பி.டி.பி. கட்சிதான்.

நாங்கள் அழிவின் விழிம்பில் இருக்கின்றோம். வாருங்கள் அரசுடன் தமிழராகிய நாம் ஒன்றிணைந்து பேசுவோம் என்றால் தட்டிக் கழிக்கின்றார்கள் தமிழ்த் தேசிய வாதிகள்.

அமைச்சர் டக்ளஸ் தேவானத்தா அபிவிருத்தியை மட்டும் தான் செய்ய வேண்டும். அரசியல் அதிகாரத்தை தேசியவாதிகள் பெறவேண்டும் என தொடர்ந்தும் நீங்கள் சிந்தித்தால் அது தமிழர்களின் எதிர்காலத்தை மீண்டும் ஒரு அவலத்திற்கு கொண்டு சென்று விடும் என்பது தான் நிஜம்.

தமிழ்த் தேசியத்திற்கும் தமிழர்களது அரசியல் தீர்வுக்கும் ஒருபோதும் ஐ.நா. தீர்மானம் உதவப் போவதில்லை. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். கால காலமாக நாம் அடிமைப்பட்ட சந்ததியாய் இருப்பதை மாற்ற வேண்டும் என்றால் மக்களுக்கான யதார்த்தமான நடைமுறைச் சாத்தியமான தீர்வை மையமாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

மக்களுக்கான அபிவிருத்திகளை முன்னின்று செய்துவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால்தான் எதிர்காலத்தில் உங்களுக்கான ஒரு நிரந்தரமான தீர்வை பெற்றுத்தரமுடியும். இதை நீங்கள் என்று உணர்ந்து அவரிடம் அரசியல் பலத்தை கொடுக்கின்றீர்களோ அன்றுதான் உங்கள் வாழ்வியலில் மாற்றம் காணமுடியும்.

# 18 ஆவது ஆண்டு நிறைவில் யாழ். பாதுகாப்பு தலைமையகம்

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு தினம் நாளை 18 ஆம் திகதி நிறைவடையவுள்ளதால் யாழில் பல பொதுச் சேவைகள் மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

யாழ். பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்தில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ. பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போதே சிவில் பாதுகாப்பு படை அதிகாரி அஜித் காரியகரவண இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

1996 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட வருடத்திலிருந்து எமது மக்களுக்கான பல சேவைகளை செய்து வருகின்றோம்.

அதன் அடிப்படையில் 18 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு இன்று காலை 9.00 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் பூசை வழிபாடும், மாலை 3.30 மணிக்கு யாழ். நகரிலுள்ள ஜும்மா பள்ளியில் பூசை வழிபாடும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதிகள் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளவுள்ளதுடன், கண் பரிசோதனை மேற்கொண்டு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையோருக்கான உணவு வசதிகள் உட்பட பல்வேறு சேவைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், இவ் அனைத்து செயற்பாடுகளும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேராவின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் நடைபெறவுள்ளதாக 55 ஆவது படைபபிரிவின் சிவில் பாதுகாப்பு படை அதிகாரி தெரிவித்தார். (25)

## வாள்வெட்டில்...

அவரது சகோதரனான இரவீந்திரன் செந்தூரன் (வயது - 25) என்பவரும், சகோதரியான விமலேந்திரன் இலக்கியா (வயது - 26) என்பவரும் வாள்வெட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர்.

அத்துடன் இதில் உரும்பிராயைச் சேர்ந்த எம்.நிரோஜன் (வயது - 23), ரொபின்ராசா (வயது - 20) ஆகியோரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், இறந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின்பேரில் காயமடைந்த எம்.நிரோசன் (வயது - 23) என்பவரை கைதுசெய்தனர். தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (25)

## சாவகச்சேரி...

நிர்மாணிக்கப்பட்டுவரும் நகர மண்டபத்திற்கு பல இலட்சம் ரூபா செலவில் ஒலி, ஒளி அமைப்பு நிர்மாணிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறுக்கிட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நகரசபை உறுப்பினர் திருக்குமரன் மேலே கூறப்பட்ட ஒலி, ஒளி அமைப்புக்கான கூறுவிலை கோரல் பத்திரத்தில் குறிப்பிட்ட பல கடைகள் அவ்விடத்தில் இல்லையெனவும், மேற்படி கூறுவிலைகள் நம்பகத்தன்மை இன்றியும் சந்தேகத்திற்கிடமானதாக உள்ளதாகவும் மக்களின் வரிப்பணம் எக்காரணம் கொண்டும் மோசடி செய்ய தானோ தனது கட்சி உறுப்பினர்களோ ஒத்துழைக்க மாட்டார்களென சுமார் ஒன்றரை மணிநேரம் பெரும் போராட்டம் நடத்தினார்.

பின்னர் பெரும்பான்மையை கொண்டுள்ள கூட்டமைப்பினர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினரின் எதிர்ப்பையும் மீறி மேற்படி விடயத்தை நிறைவேற்றினர்.

## பதுளையிலும்...

சில தினங்களுக்கு முன்னதாக பதுளை நகரில் முஸ்லிம் கடைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு பொதுபலசேனா அமைப்பு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் பொதுபலசேனா அமைப்பின் உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆடை வர்த்தக நிலையங்களில் ஆடை மாற்றும் அறைகளில் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்து பொதுபலசேனா போராட்டம் நடத்தியுள்ளனர். இதேவேளை, தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. பதுளை நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. எனினும் அங்கு பதற்றம் நீடிக்கிறது.

## வன்முறை...

அதேவேளை அளுத்கமவில் அமைந்துள்ள முன்னணி ஆடை உற்பத்தி நிறுவனமொன்றின் மீது தீ வைக்கப்பட்டுள்ளது.

எமரல்ட் சேர்ட் நிறுவனத்தின் மீதே இவ்வாறு தீ வைக்கப்பட்டுள்ளது.

## வன்செயலை...

இடங்களுக்கும் இந்தமாதிரி வன்செயல்கள் பரவலாம் என்றும் அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்களுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

## அளுத்கமவில்...

அத்துடன் கடைகள் பல தீக்கிரையாக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் உள்ளன. வாகனங்கள் பல எரியூட்டப்பட்டுள்ளன. பெறுமதியான பொருட்கள் பல சூறையாடப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை மாவட்டம் அளுத்கம பிரதேசத்தில் சிங்கள இளைஞர்களுக்கும், அப்பகுதியின் முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலால் அப்பகுதியில் வன்முறைகள் வெடித்தன. இதனால் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பத்துக்கும் மேற்பட்ட கடைகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. பலர் தாக்கப்பட்டனர்.

இதுதவிர கோதாபிட்டிய, மீரிபென்ன, அட்ஹிகரகொட பகுதிகளில் முஸ்லிம்களின் வீடுகளும் தீயிட்டு எரிக்கப்பட்டன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இந்த வன்முறைகளை அடுத்து அப்பகுதிக்கு விசேட அதிரடிப் படை பொலிஸார் அனுப்பப்பட்டு அளுத்கம, பேருவளை பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார். அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை தாம் கைது செய்துள்ளனர் எனவும் குறித்த பகுதியை விசேட அதிரடிப்படைப் பொலிஸார் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்வும் தெரிவித்தார்.

## எமது பிரச்சினைக்கு...

வேண்டும். எமது நோக்கம் ஆக்கத்திற்கானது ஆனால் சுயலாப அரசியல்வாதிகள் அழிவை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் என்பதை மக்களாகிய நீங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களையும் இந்தப் பகுதிகளையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு நாம் செயற்படும் அதேவேளை, அதுவே எமது அரசியல் கடமையுமாகவுள்ளது.

இதன்பிரகாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு அமைவாக நான் இம்மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு வரும் அதேவேளை, மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வு காண்பது முக்கிய நோக்கமாகவுள்ளது.

எனவே, மக்கள் சரியானவர்களை தெரிவு செய்து சரியான திசை வழி நோக்கி பயணிக்கும் பட்சத்திலேயே இவ்வாறான அபிவிருத்திகள் மென்மேலும் சிறப்பாக முன்னேற்றம் காணும்.

அதுமட்டுமன்றி உங்களது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் அதேவேளை, பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களது வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் பெற்றோரை இழந்த பிள்ளைகளது உதவி நலன் திட்டங்களுக்காகவும் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நாம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றோம்.

முக்கியமாக உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி அவற்றின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்துறைகளை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறு அமைச்சர் துறைசார்ந்த உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதனிடையே பறங்கியாற்று திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்திய அமைச்சர், அத் திட்டம் 2 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் 5 ஆயிரம் குடும்பங்கள் உடனடியாக பயன்பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதையும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதனிடையே மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஏனைய கிராமங்களினதும் பொது அமைப்புக்களினதும் தேவைகள் பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிருந்தாகரன், அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

# அளுத்கம சம்பவத்தை கண்டித்து கிழக்கில் சட்டத்தரணிகள் போராட்டம்




(பேருவளை)

களுத்துறை மாவட்டம் பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை கண்டித்து நேற்று நண்பகல் திருகோணமலையில் சட்டத்தரணிகள் கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக வீதியில் கூடிய சட்டத்தரணிகள், பேருவளை மற்றும் அழுத்கம சம்பவங்களைக் கண்டிக்கும் வகையிலான வாசக அட்டைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

சிறுபான்மை இனத்தவர்கள் மீதான இந்தத் தாக்குதல்கள் இனவாத, கொடூரமான மற்றும் நாகரீகமற்ற தாக்குதல்கள் என்று தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் எழுதப்பட்ட அந்த வாசக அட்டைகளில் குறிப்பிடப்பட்டு, அரசாங்கத்திடம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட வேண்டும் என்ற வேண்டுகோளும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை அரசாங்கத்தில் அங்கம் பெற்றுள்ள முஸ்லிம் பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் அந்தக் கட்சிகளுக்கு உள்ளேயும் எழுந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் ஆகிய முஸ்லிம் கட்சிகள் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளாக இருக்கின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு வழங்கி வரும் ஆதரவு குறித்து இன்று கூடி ஆராயவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதேவேளை கிழக்கு மாகாண சபையின் துணைத் தவிசாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கொள்கை பரப்பு செயலாளருமான எம்.எஸ். சுபைர் தமது கட்சித் தலைவருக்கு எழுதியுள்ள அவசர கடிதமொன்றில், அரசிற்கு வழங்கும் ஆதரவை மீளாய்வு செய்யுமாறு கேட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## அரசுடன் இணைந்திருப்பதால் வெட்கப்படுகிறேன்

### ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அமைச்சராக இருப்பது குறித்து தான் வெட்கப்படுவதாகவும், தனது மக்களை தன்னால் பாதுகாக்க முடியாது போயுள்ளதாகவும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அரசாங்கத்தில் இருந்து விலகுவது குறித்து உடனடியான தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் 80 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஆபத்தான நிலையில் இருக்கும் மூன்று பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுக் காலை அளுத்கம பிரதேசத்துக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு கருத்து பொது மக்களுடன் உரையாடிய அவர் தர்கா நகரிலுள்ள எனது மக்களை பாதுகாக்க முடியாததையிட்டு வெட்கப்படுகின்றேன் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

## வீதி விபத்தில் எட்டுப் பேர் காயம்

பளை- ஏ-9 வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் எட்டுப்போர் காயமடைந்துள்ளனர்.

பளை கச்சாய் வெளி என்ற இடத்திலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது. (37)

## இரங்கல் திருப்பலி

நவாலியில் பல்வேறு சமூக மற்றும் சேவைகளை மேற்கொண்ட ஐசாக் அன்ரனிதாஸ் கடந்த 13 ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

அவரது இறுதி இரங்கற் திருப்பலிப் பூசை நேற்று மாலை சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் ஆலய பங்குத்தந்தையின் தலைமையில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இறுதி ஊர்வலம் இடம்பெற்று நவாலி தெற்கு, சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (92)

## பெண்ணின் சடலம் மீட்பு

(மறவன்புலோ)

யாழ். மறவன்புலோ மேற்கிலுள்ள வீடொன்றில் இருந்து மூன்று பிள்ளைகளின் தாயான எஸ். ரஞ்சனாதேவி (வயது-46) என்பவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டுத்திட்டத்தில் இவருக்கு வழங்கப்பட்ட பணத்திற்கு மேலதிகமாகக் கடன்களைப் பெற்று குறித்த பெண் வீடு கட்டியுள்ளதாகவும், இதன் காரணமாக கடன் தொல்லை இருந்ததாகவும் அயலவர்கள் தெரிவித்ததாகப் பொலிஸார் கூறினர்.

குறித்த பெண்ணின் சடலம் தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## ஆணின் சடலம் மீட்பு

(புத்தூர்)

யாழ். புத்தூர் கிழக்குப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்றுக் காலையில் மீட்கப்பட்டதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியினைச் சேர்ந்த சுந்தரலிங்கம் இராமச்சந்திரன் (வயது-55) என்ற நபரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தனது குடும்பத்தினருடன் கதைத்துக்கொண்டிருந்துவிட்டு படுக்கையறைக்குச் சென்றவர் நேற்றுக்காலை சடலமாகவே காணப்பட்டார் எனக் குடும்பத்தினர் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டுவருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## தூக்கில் தொங்கிய நிலையில் மாணவன் சடலமாக மீட்பு

நெல்லியடி, கரவெட்டிப் பகுதியில் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் 16 வயது மாணவன் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நெல்லியடி இருதயக் கல்லூரியில் கடந்த வருடம் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய கரவெட்டி வடக்கு ஆண்டிவளவைச் சேர்ந்த கருணாகரன் வின்சன் (வயது-16) என்ற மாணவனே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று மாலை 6.00 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தாயார் வீட்டில் இருந்து வெளியில் சென்று மீண்டும் திரும்பி வந்து பார்த்த போது இவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். சடலம் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (18, 25)

## உள்ளூராட்சி வாரம் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணம் முழுவதும் உள்ள உள்ளூராட்சிச் சபைகளில் உள்ளூராட்சி வாரம் நேற்று ஆரம்பமானது

மாநகர சபை, நகர சபை, பிரதேசசபை என 34 உள்ளூராட்சிச் சபைகளிலும் பிரத்தியேகமான முறையில் ஒவ்வொரு சபைகளும் தமது தூரநோக்கு அடிப்படையில் உள்ளூராட்சி வாரத்தினைக் கடைப்பிடிக்கவுள்ளன.

நேற்று முதல் தொடர்ந்து 7 நாட்களுக்கு இந்த உள்ளூராட்சி வாரம் இடம்பெறவுள்ளது. (92)

## மரண அறிவித்தல்

### பொன்னையா செல்வராசா



கரவெட்டி, கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கரவெட்டி பட்டின சபையின் முன்னாள் உறுப்பினருமான பொன்னையா செல்வராசா அவர்கள் நேற்று 2014.06.16 ஆம் திகதி திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னாச்சி அவர்களின் பாசமிகு மகனும், சிவஞானயோகேஸ்வரியின் அன்புக் கணவரும் நந்தகுமார் ஜடென் மார்க்ஸ், வசந்தகுமார் (கரவெட்டி பிரதேச உதவி இணைப்பாளர் தோழர் முரளி), செல்வகுமாரி, நிர்வகுமாரி, சதீஸ்குமார், இந்திரகுமார், அமரர் சாந்தகுமார், ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லம்மா அவர்களின் மருமகனும், கலைச்செல்வியின் மாமனாரும், சூரியா, பிரியா, சாந்தகுமார் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 2014.06.17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் உயிலங்கண்டடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தோழர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

**மகன் - தோழர் முரளி (வசந்தகுமார்)**
**0778089909**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(இ)

## காணிகள் மீளளிப்பு விரைவில் யாழ்.பாதுகாப்பு படை அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் காணிகளை மீண்டும் அவர்களிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும், அதற்கான கலந்துரையாடல் ஒன்றினை விரைவில் மேற்கொள்வோம் என 55 ஆவது படைப்பிரிவின் சிவில் பாதுகாப்புப் படை அதிகாரி அஜித் காரியகரவண தெரிவித்தார்.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ். பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்தில் நேற்று பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது பாதுகாப்பு படைத் தலைமையகம் பொதுமக்களுக்கு பல சேவைகளை செய்துவரும் நிலையில் மக்களின் காணிகளை அவர்களிடம் மீண்டும் வழங்கி அவர்களை மீள்குடியேற்றம் செய்தால் மக்கள் மேலும் இராணுவத்தின் சேவைகளை பெற்றுக் கொள்ள விரும்புவார்கள் என்றும், ஏன் மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

அதற்கு அவர் பதிலளிக்கையில், இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் காணிகளை மீள் குடி யேற்றம் செய்வதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார். (25)

## இணைந்து செயற்பட விருப்பம்

(கொழும்பு)

பொலிவியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜி-77 உச்ச மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த கியூபா நாட்டு ஜனாதிபதி ராவுல காஸ்ட்ரோ, தன்னை விரும்பும் தலைவர்களுடன் இணைந்து செயற்படத் தான் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

எமக்கு எம்மை விரும்பும் தலைவர்களுடன் இணைந்து செயற்பட விருப்பம், நீங்கள் எங்களது நண்பர்கள் என்று கியூபா ஜனாதிபதி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச கலந்துரையாடல்களின் போது கியூபா எப்போதும் இலங்கைக்கு துணையாக இருக்கும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கியூபா நாட்டு ஜனாதிபாதி உறுதியளித்திருந்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.